
குடும்ப உறவுகளின்

# சங்கமம்

## Communion of Family Relationships

No 03 September 2017 Volume 03

07 NOV 2017



**Holy Family Communication Service**
**Unit of Jaffna**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப உறவுகளின்

# சங்கமம்

Communion of Family Relationships

No 03 September 2017 Volume 03

யாழ்ப்பாண பொதுநூலகம்

8331(P)
PL

Holy Family Communication Service
Unit of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kudumpa Uravuhalin Sangamum — An introduction

We are happy to meet you through this bulletin 'Kudumpa Uravuhalin Sangamum'

The vision of our Founder is to create 'a family' to fulfill the dream of God, with the motto 'God Alone' based on the spirituality of the Holy Family. Thus the Congregation of the Holy Family, founded with various vocations, gradually begins to comprehend the profound meaning "One Family" and tries to go forward speedily to accomplish this task.

This bulletin - 'Kudumpa Uravuhalin Sangamum' published once a year undoubtedly is one of the fruits of this important task. The title of the bulletin is made out of a composition of words that are found in this various bulletins published by different vocations. The word 'Kudumpam' is taken from the bulletin of the Priest Associate ( Sri Lankan Family Journey), "Uravukalin" from the bulletin of the Lay Associates (Uravin Palam) and "Sangamum" from the bulletin of the Apostolic Sister destiny communion of the Family bond. We are pleased to tell you that this bulletin carries articles, reports and news of the five vocations including contemplative Sisters and Consecrated Seculars.

We hope that this publication of common bulletin will continue in a small way to accomplish the dream of our Founder.

**INFO Communication Team**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவுகளின் சங்கமம் - ஓர் அறிமுகம்

'குடும்ப உறவுகளின் சங்கமம்' என்னும் இச் சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் நாம் மகிச்சியடைகின்றோம்.

மூவொரு கடவுளின் சாயலான திருக்குடும்பத்தின் ஆன்மீகத்தில் 'இறைவன் மாத்திரமே' என்னும் விருதுவாக்கோடு 'ஒரு குடும்பம்' உருவாகி, இறைவனின் கனவை நிறைவேற்ற வேண்டுமென்பதே எம் நிறுவுனரின் தூர நோக்கு. இன் நோக்கில், பல அழைத்தல்களைக் கொண்ட நம் திருக்குடும்ப சபையானது இன்று 'ஒரே குடும்பம்' என்னும் ஆழ்ந்த ஆன்மீகக் கருப்பொருளை படிப்படியாக உள்வாங்கி உறுதியோடு நகர்ந்து செல்கின்றது.

இம் முயற்சிகளுள் ஒன்றுதான் ஐந்து அழைத்தல்களும் ஒன்றிணைந்து வருடம் ஒரு தடவை வெளியிட முன்வரும் 'குடும்ப உறவுகளின் சங்கமம்'. திருக்குடும்ப குருக்களால் வெளியிடப்படும் 'Sri Lankan Family Journey' என்னும் சஞ்சிகையிலுள்ள 'குடும்பம்' என்னும் பதமும், திருக்குடும்ப இல்லறத்தோரால் வெளியிடப்படும் 'உறவுகளின் பாலம்' என்னும் சஞ்சிகையிலுள்ள 'உறவு' என்னும் பதமும், திருக்குடும்ப அப்போஸ்தலிக்க துறவிகளால் வெளியிடப்படும் 'சங்கமம்' என்னும் பதமும் இணைந்து உருவானதே 'குடும்ப உறவுகளின் சங்கமம்'. அத்துடன்' ஆழ்நிலைத் தியான சகோதரிகள், திருமட சார்பற்ற சகோதரிகளினதும் ஆக்கங்களும் உள்ளடங்கலாக, அனைத்து அழைத்தல்களினதும் படைப்புக்களோடு 'குடும்ப உறவுகளின் சங்கமம்' வெளிவருகின்றது என்பதை மகிழ்சியுடன் தெரிவிக்கின்றோம்.

நமது நல்ல பிதாவின் 'ஒரே குடும்பம்' என்னும் கனவு நனவாக, இம் முயற்சியும் சிறிய பங்களிப்பை வழங்கி நிற்கும் என்பது எமது நம்பிக்கை.

தகவல் தொடர்பாடல் குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Table of Content


- Editorial
- Provincial's Message
- உறவு விடுக்கும் சவால்
- Challenges of the Top Job
- அழகாண பூமியில் ஆயிரம் அனுபவங்கள்
- அர்ப்பணமா? அன்பளிப்பா?
- Tresure Hunding
- யார் இந்த பியன்வெனு
- Our Being gives life for all being
- பழைய காட்சி புதிய பார்வை
- Message - At the opening of the 7th Asian ...
- நெடுந்தீவு - 75வது யூபிலி விழா
- My life among the suffering
- புகழ்கின்றேன்.
- One with the world: for the world
- வார்த்தை
- Mother Visitation விடுதிச்சாலை தின விழா
- Journey towards an unknown valley....
- மட்டுவாழ் பொதுநிலையினர்
- Freed to "See"
- மனிதனாய் வாழ்ந்த புனிதன்
- A New Mind set and a New way of relating to God
- பிரபஞ்சத்துடன் எனது உறவு
- Prayer, Meditation & contemplation...
- மாற்றம் எம் வாழ்வில்
- பெட்டி! பெட்டி! பெட்டி!
- Message - Visit to the Humanitarian Project
- சிந்தனை சிதறல்கள்
- Got to Know - PBN Family
- வாழ்வின் தேடல்
- My heart filled with gratitude




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலையகத்தின் ஏழ்மையில் எமது பங்கு
- My Experience
- விடியலின் கீதம் இசைப்போம்
- Makers of Peace and Reconciliation
- எமது சபை ஆன்மீகமும் வாழ்வின் அனுபவங்களும்
- Grace filled year
- இயற்கையின் மனிதன் இயேசு
- சிலுவைகள் சுமக்க சீமோன்களே வாருங்கள்
- The Nature Speaks .....
- இன்றைய இளைஞர்கள்
- மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது?
- Burning Heart
- அருட்சகோதரி லியோவின் நினைவலைகள்
- Jesus connects us with Nature
- வித்தியா வழக்கும் சில வினாக்களும்
- மகிழ்வின் நன்நாள்
- எமது நிறுவினரின் பெயர் கொண்ட விழா
- Count Your Blessings
- கவிதை வரிகளில் வாழ்வை வடிக்கின்றோம்
- தியான நாட்கள் - புது மனிதர்களாக மாற


Live communion,
celebrate family



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Editorial



This bulletin the 'Kudumpa Uravuhalin Sangamum' is the collection of articles from the five vocations. This bulletin is both informative and inspirational to all the members of PBN and whoever is in touch with it. We believe that each article will bring something for you to relish and cherish.

We are journeying towards our Bicentenary year and especially during this year recalling our past history and counting on our blessings. This issue of "Kudumpa Uravuhalain Sangamum" carries our experiences of being members of our big Family of PBN, remembering and recalling our past history with gratitude, our personal retreat experiences, Bicentenary project-youth for change, feast of our founder, Poem about our mother Earth, and some current issues. All are meaningful and life- giving inspirations and we are grateful to all those who have contributed.

We are very much grateful to our Asian leader of Lay Associates Mrs.Regina Ramalingam for her tireless service and her contributions to our Family of PBN for the past 8 years. We say 'a big thank you' for her loving service.

We congratulate our newly elected Asian leader Mr.Irudaya Dass from India for his"YES" to carry out the task for the coming years. We are united with you in spirit.

Dear members of PBN, our Mission is the Mission of the whole Family. We are gradually developing our awareness that we are "One Family on Mission - gift in a changing world" and that every member and each vocation is responsible for the Whole for making our Charism known and visible, witnessing to hope and joy in our world (Fourth congress of the Family 2012).

'I am a Mission on this earth; that is why I am here on this earth.'

Therefore let us walk together, reminding each other that we are moving towards the Bicentenary "As a Family on a Mission of Communion".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Provincial's Message

"Live Communion; Celebrate Family."

That was the day when we began the 7th Asian Lay Associates Convention. The celebration made me reflect on how beautiful it is to come together as members of the PBN Family.

All spiritual traditions have a clear code of ethics so that people can grow and prosper as a community, restrain individual impulses, and together withstand challenges great and small. This is always the role of ethics, to bind together individuals in trustworthy relationships so that we can stay together, through the vicissitudes of life.

Today the challenge is to be present to one another. We may be in contact yet not connected. Our Association opens the path to admire and taste the living of our charism. The this issuse 'Kudumpa Uravuhalin Sangamum' continues to pave the path to listen to each other and to be present to others, as we read the story of each vocation. Also this centers all our focus to live 'ONENESS.'

Each year, the remembrance of our Founder's Birthday, increases our awareness to be together, to live communion and to celebrate Family.

Let's celebrate our choice, and keep on moving together.

God's blessings on each one.

**Sr. Christa Mariathas**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு விடுக்கும் சவால்

எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீா் என்று உலகம் நம்பும். (யோவான் 17: 21) துறவி என்பவர் அர்ப்பணிக்கப்பட்ட ஒருவர், அர்ப்பணமே துறவற வாழ்வின் அடிப்படை. அழைக்கப்பட்ட வர்களிடம் இயேசு, இரு அடிப்படை சவால்களை விடுக்கின்றார். (மாற் 3:13-15) அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை இயேசுவோடு இருப்பதற்கும், அவரால் அனுப்பப்படுவதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் இன்று எம் ஒவ்வொருவரின் வாழ்வையும் ஆழமாக உற்று நோக்கும் போது நாம் எங்கே நிற்கின்றோம். எமது வாழ்வும் பணியும் புதுப் பொருள் பெறுகின்றதா? இதற்கு நாம் ஒவ்வொருவரும் உழைக்கின்றோமா? இது ஓர் கூட்டு வாழ்வின் உறவு, இந்த உறவு உண்மையானதா என்பது கேள்விக்குறியாகும்.

குழுவில் ஏற்படும் விரிசல்கள் உறவின் பலத்தைத் சிதறடிக்கின்றன. குழுவில் காக்கப்பட வேண்டிய இரகசியம் கசியும் போது உறவு உருக்குலைகின்றது. குழுவில் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ள முடியாத தன்மை ஏற்படும் போது உறவு உடைகின்றது. குழுவிலே “குழுக்கள்” தோன்றும் போது உறவு உதாசீனம் செய்யப்படுகின்றது. குழுவில் “நான்” என்ற அகந்தை தலை தூக்கும் போது அன்பு உறவு விரிசல் அடைகின்றது. இவ்வாறான சூழலில் புதிய, ஆரோக்கியமான உறவுச் சூழலை உருவாக்குவது தான் எமது சவாலாக அமைகின்றது. ஏனெனில் குழுமம் என்பது தனி நபர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நோக்கத்தோடு ஒரே பணியில் ஒரே இலட்சியமாக ஒத்துழைத்து பயணிப்பது. இங்கு தான் உறவு மலர்கின்றது இது தான் இன்றைய சவால்.

ஜோர்ஜ் லிபேரா கூறுவார் “குழுமம் அன்பின் அர்ப்பணத்திலும் சபையின் அடையாளத்திலும் இணைக்கப்படுகின்றவையாக அமைய வேண்டும்.”

ஒருமித்து இருப்பது எதற்கு? அன்பு செய்ய, செவிமடுக்க, ஏற்றுக் கொள்ள, திறந்த மனப்பான்மையோடும் எப்போதும் தயார் நிலையில் வாழ்வதற்கு.

ஒருமித்து வாழ்வதன் சவால் தான் என்ன? உரையாடலும், புரிந்துணர்வும், மதிப்பும், பங்கேற்றலும், பகிர்ந்து கொள்ளலும் தாங்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நிறுவனம் யாழ்ப்பாணம்

கொள்வதும் மன்னிப்பதும், அன்புறவும், இரக்கமும், அக்கறையும், கரிசனையும். குழுமத்தில் ஒன்றாக வாழ வழிவகுக்கிறது. இவற்றை பின்பற்றி வாழ நாம் தயாரா? இவற்றை பின்பற்றுவது இலகுவான செயல் அல்ல, இருப்பினும் சந்தோஷம் நிறைந்த, மகிழ்வான குழும வாழ்விற்கு விடுக்கப்படும் சவால்களை ஏற்று வாழ்வது இன்று இயேசு நமது இருத்தலுக்கு அனுப்பப்படுதலுக்கு விடுக்கும் சவால்.




திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு தியானத்தில் தனது உரையில் குடும்பம் பற்றி கூறுகின்றார். "எந்தக் குடும்பமும் குறைவே இல்லாத குடும்பம் இல்லை. நம்மிடத்தில் குறை வில்லாமல் யாருமே நிறை வுள்ளவர்கள் (perfect) அல்ல. நாம் ஒருவரை ஒருவர் குறை சொல்கின்றோம் ஏமாற்றுகின்றோம், மன்னிப்பு இல்லாமல் ஒரு ஆரோக்கியமான குடும்பம் உருவாக சாத்தியமே இல்லை. நம்முடைய உடல் வளர்ச்சிக்கும் மன்னிப்பு மிக அவசியம். மன்னிப்பு இல்லாத குடும்பம் முரண்பாடுகளின் அரங்கமாகவும் அடுத்தவரை புண்படுத்தும் போர்க்களமாகவும் மாறிவிடும். மன்னிப்பு இல்லாத குடும்பம் நோய்வாய்படுகின்றது. மன்னிப்பு, ஆன்மாவுக்கு விடுதலையையும் மனதுக்கு தூய்மையையும் கொடுக்கின்றது. அடுத்தவரை புண்படுத்துவது என்பது நஞ்சு போன்றது. குழுமம் என்பது உயிர் வாழும் இடமாக இருக்க வேண்டும், மரணிக்கும் இடமாக இருத்தல் ஆகாது. நோய் தரும் இடமாக இருக்கக் கூடாது மன்னிப்பு மகிழ்ச்சியைக் கொடுக்கும், சுகத்தைக் கொடுக்கும்.

எனவே வாழ்வின் சவால்கள் என்றும் வளர்ச்சியின் ஏணிப்படிகள். சவால்கள் விடுக்கப்படும் போது தான் புதிய மாற்றங்களும் திருப்பங்களும் உருவாகும், வளர்ச்சியடைந்து வரும் இவ்வுலகில் அர்ப்பண வாழ்விலும் புதிய புதிய மாற்றங்களும் திருப்பு முனைகளும் வேண்டும். காலத்திற்கும், நேரத்திற்கும், சூழலுக்கும் ஏற்ற பணிகளை நாம் எமது வாழ்வாலும் செயற்பாடுகளாலும் செய்ய முனைய வேண்டும். வேகமாக மாறிக் கொண்டு வரும் உலகோடு நாமும் சேர்ந்து ஓட வேண்டும், தேட வேண்டும். புது வாழ்வு காண வேண்டும். இதற்கு யோவானின் இறைவார்த்தை சவால் விடுக்கின்றது, செபிமடுப்போம். "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர்கள் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகின்றேன்". (யோவான் 17:19)

***அருட்சகோதரி டிலீஸியா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Challenges of the top job
## (to all the Principals)



The head of a school with Christian Tradition is tasked with, to maintain its ethos and the heads see this as the most demanding aspect of their job. Here's a new initiative to provide them (Principals) with one to one spiritual support.

"For quite some years, I had the best job in the world- head of a school. It is a privilege to lead a school, to work with dedicated generous and inspiring colleagues and to be a part of children's lives as they grow in to young men and women who have such potential to change the world for better".

For Principals of school like the one above, there's almost, always a sense of vocation too. They don't think so much of 'having a job' or a 'profession as living out a calling'.

A principal being asked to sum up her feelings of the past, the following was her answer; opportunity, challenge, trust, vocation, relationship and community.

This is the language of Vocation and Ministry

**Sr. A quinas**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான பூமியில், ஆயிரம் அனுபவங்கள்

நாம் வாழும் இந்தப் பூமி எத்துனை அழகு. அதை படைத்த கலைஞனின் அறிவு, ஆற்றலை வர்ணிக்க யாரால் இயலும். அவரின் கை வேலைப்பாடுகள், இயற்கை வனப்புகள், விண்மீன் கூட்டங்களின் சுடரொளிகள், யாவும் ஒன்று சேர்கின்ற மனித உள்ளத்திலும் வாழ்விலுமே இந்த அதிசயமான வளங்களை சுதந்தரமாகப் பெற்ற நாம் எப்படி வாழ்கின்றோம்?

வானத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் கண்டங்கள் பாய வேண்டும், உலக அரசுகளை தன்னகத்தே ஆட்டிப்படைக்க வேண்டும், என்ற மமதை கொண்டவனாய் கடவுளை மறத்து தீயவன் ஆளுகைக்குள் சிக்கித்தவிக்கிறான். ஆபாசப் படங்களை காட்டி பணம் சம்பாதித்து, சோதோம் கொமறா பட்டினங்கள் போல் அழிவின் பாதைக்குள் மாறிக் கொண்டிருக்கிறான். இதன் விளைவு - பூமித்தாய் வேதனைப்படுகிறாள். கடல் வளம் தரை வளம் குன்றிவிட்டது. வானம் பொய்த்து விட்டது. பருவ மழை இல்லை, நில நடுக்கம், எரிமலை கக்குகிறது. பனிப்போர், சூறாவளி எல்லாமே நச்சு வாயுக்கள் கலக்கப்பட்டு பயங்கர நோய்கள், அதிகப்படியான மரணங்கள், அமைதி இழந்த நிலை எம்மை வாட்டுகின்றது.

விஞ்ஞான வளர்ச்சி, இனப்பெருக்கம், தற்கொலைகள் விண்வெளியில் குடியிருக்கும் ஆவல். இதன் மத்தியில் மேலை நாட்டில் வாழும் சந்ததி கேட்கும் வினா என்ன? எல்லாம் எம் கையில் இருக்கையில் நாம் ஏன் செபிக்க வேண்டும்? கடவுள் எதற்கு, ஏன் அருட்சாதனங்கள்? அவைகள் எமக்கு அவசியமில்லையே, நாம் கடவுளிடம் எதற்காக கையெடுக்க வேண்டும்? இந்த இளம் சந்ததிக்கு நாம் எப்படி பதில் கூற முடியும்?.

நொந்து போன பூமித்தாயை மதிக்கும் மக்கள் எங்கு இருக்கின்றார்கள். பெற்ற தாயையே கவனிக்க மறுக்கும் பிள்ளைகள் பூமித்தாயை அன்பு செய்வார்களா? இது வேதனைக்குரிய விடயம், இவை என் வாழ்வை சிந்திக்க வைக்கின்றன. எமது சமுதாயம் பல விதத்தாலும் நொந்து காணப்பட்டாலும் மனமாற்றம் நிகழ்வதில்லை. ஆதிப்பெற்றோர் செய்த பாவம், ஆபேலின் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனை நோக்கி கூவியது, என்று நாம் வாசித்து அறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டு இன்று வரை எத்தனை மாசற்றவர்களின் இரத்தம் அநியாயமாக சிந்தப்பட்டு அழகிய எம் நாடு பாவப்பட்ட பூமியாக மாறிக் கொண்டிருக்கிறது.

எமக்கு உண்மையில் இன்றும் வேதனைக்குரியது, பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இன்னும் பாதிக்கப்படுகிறார்கள். சுனாமியினால் பாதிக்கப்பட்டு இல்லிடம் கொடுக்கப்படாதோர், போரினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்தவர்கள், இல்லிடங்களை பறிகொடுத்தவர்கள், போரினால் கடத்தப்பட்டவர்கள், பணத்திற்காக கைது செய்யப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள் என்று இனம் காணப்படுகின்றனர். பாதுகாப்பாக மடத்திற்குள் இருப்பதை விடுத்து தேவையுள்ளவர்களை தேடிச்சென்று உதவி செய்யுங்கள் என்ற திருத்தந்தையின் வேண்டுகோள் என்னை உறுத்துகிறது. கடந்த கால பழைய அனுபவங்கள் அதிகமாக போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது நோயாளருக்கும் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சென்று உதவி செய்கின்றேன்.

புற்றுநோய் பயங்கரமானது, எந்த அவயம் என்று பார்ப்பதில்லை. வயிறு, நெஞ்சு, தொண்டை இவ்விதமாக மக்களின் துன்பங்கள் எனக்கு பெரிய சவாலாக இருக்கின்றது. செபியுங்கள் என்று பயத்தினாலும், நம்பிக்கையினாலும் மனநோயிலும் கூட இளம் பிள்ளைகள் கஸ்ரப்படுவது வேதனை தருவதாகும். சாதி, மதம் பாராது அவர்களுக்கு பணிவிடை செய்வது இரக்கச் செயலாக நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். தீய சக்திகளால் துன்பப்படுவோர் பலரை சந்திப்பேன். அவர்களுக்கு ஆன்ம வைத்தியர்களிடம் செல்ல வழிகாட்டுவது பெரிய ஆறுதலாக இருக்கிறது. எல்லாவற்றிக்கும் மேலாக இறைவன் தந்த இந்தப் பூமி இயற்கை இவற்றை மதித்து அன்பு செய்யும் போது பூமித்தாய் தன் மக்களை ஆசீர்வதிப்பாள் சுகமான வாழ்வு தருவாள் என்பதே என் நம்பிக்கை.

*அருட்சகோதரி அம்புரோரின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணமா? அன்பளிப்பா?

விதை ஒன்று மண்ணில் மடிகின்றது
அது மரமாக மண்ணில் எழுகின்றது
அரும்பாகி, கிளையாகி, கொப்பாகி, பூவாகி
பிஞ்சாகி, காயாகி, கனியாகி, வித்தாகின்றது
இவையெல்லாம் என்ன?
விதைக்குள் இருந்த விந்தைகள் அல்லவா?
அத்தனையும் பகிரப்படுகின்றன
அதுதான் அர்ப்பணம்.




வளர்கின்ற மரங்களைப் பார்க்கின்றேன்
பசுமையை பஞ்சமின்றி வெளிப்படுத்துகின்றன.
இலைகள் பழுத்து உதிர்கின்றன ஏன்?
இன்னொன்றின் வரவிற்காய் அது மட்டுமா?
கொப்புக்கள் கத்தரிக்கப்படுகின்றன ஏன்?
புதியனவற்றின் வரவிற்காய் வழிவிடுகின்றது
இது அர்ப்பணமா? அன்பளிப்பா?
புத்தியுள்ள மனிதா புரிந்துகொள்!!

மரங்கள் வெட்டப்படுகின்றன - ஆனால்
அவை மௌனம் காக்கின்றன
வெட்டப்பட்டவை மருந்தாக, பலகையாக,
காகிதமாக, அலங்காரப்பொருளாக,
தளபாடங்களாகவென
உருமாற்றப்படுகின்றன - ஆனால்
இவை அனைத்தும் ஓர் உயிரிலிருந்து
உவந்தளிக்கப்பட்டவை - இவற்றில்
அர்ப்பணமா? அன்பளிப்பா? புலப்படுகின்றது
ஆழச் சிந்திப்போம்!



833(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களை குறை கூறவில்லை
உன்னத படைப்புள்ள மனிதர் நாம்
திருப்தி காணாது திண்டாடுகின்றோம்
எமது அர்ப்பணம் எப்படிப்பட்டது?
மனிதரை திருப்திப்படுத்த பயன்படுகின்றதா?
சிந்தித்து சீரமைக்க வேண்டியுள்ளது.

பல உணர்வுகளைச் சுமந்து வரும் உள்ளங்களுக்கு
எமது செவிமெடுத்தல் எப்படி இருக்கின்றது?
உதவி தேடும் விழிகளுக்கு
நாம் கூறும் பதில் என்ன?
இந்நிலைகளில்
எனது அர்ப்பணம்.........
சிந்திப்போம்....!!!
மாற்றத்தைக் காணுவோம்......
அன்பளிப்பாகவல்ல
அர்ப்பணிப்போம் எம் வாழ்வை - முற்றும்
இறைவனின் மகிமைக்காய்



அருட்சகோ. ஜெஸ்மின் யேசுநேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Treasure Hunting

I was going to visit a patient. On the way I stepped into a Hindu school, where my nephew is teaching. Principal greeted me happily. After mutual introduction I came to know his pathetic childhood story. Also he said that he witnessed at Murukandy, a woman begging and feeding her baby as there was no milk the child was screaming. This incident touches my heart and made me to decide my future to work for the poor this is my precious project.

I too am excavating my treasury to count my blessing in this year of gratitude. The biblical personalities are giving me helping hand. The gentile woman Ruth determined to follow he mother-in-law Naomi, whose God and people became her own. Also Boas her husband and son Obed got a place in the lineage of Salvation History.

Jacob the deceiver found by God of Garbage in the wilderness, in the desolate waste, who wrestled with the angel obtained the blessing and became Israel, and the leader of the twelve Tribes.

Moses, even though a fugitive is being considered the father of the Paschal meal and the Great vigil night, which is being celebrated by whole of Christian world every year. Finally God's radiant light enveloped even his skin and the Israelis were unable to face him unless he covered his head.

In short, we could see Elisha being blessed with Yahweh's presence in the passing gentle breeze; the drowning Jonah met the pardon of the merciful God in the belly of a whale, Job unimaginably covered with suffering encountered God in his patient waiting moments and not in double blessing but in the vindication of God over the evil, and David the adulterer, conspirator, and betrayer of his faithful friend met God's pardon, in his contrition and acknowledgement.

The greatest fortune catching persons are enlightening us in the New Testament. Mary our mother in her humble submission to God's will became the mother God our savior. St. Joseph in his dream Zachariah in his dumbness, Magdalena the prostitute in her enemy's condemnation, the great widow in her mite, Levy the tax collector in the invitation of his dear master Christ, the curious Zacheus in giving up his possession, St. Peter in


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

denial of his master the Messiah, St. Paul on his way to arrest the followers of Christ and Mary in her contemplation at the feet of Christ her friend, had encountered their treasures in their lives.

Our Founder picked up his treasure at the altar of our Lady of Mount Carmel in the Sulpice church at Issy in Paris. One of his daughters Mother Conception Orieare our novice mistress in her ever growing thirst in stilled perfection in her novices. One day she stepped in our midst wanted to know who the 3 novices were that owned certain numbers. After discovering the persons, her hidden smile and satisfaction betrayed that she is in possession of this precious gift in her mission. She also used to warn us to pay attention to little things and said even on picking up a headpin from the floor, may depend our fortune our perseverance.

Today at General level the bi-centenary team is trying to find out the treasures buried in each unit. Our unit team is digging past histories and photos etc... to bring out treasures from our communities.

We too are excavating our treasury to bring out in to the light the precious things we are cherishing in our hearts "where our heart there is is our treasures".

The treasures are scattered all over the places in the universe in each persons and events as well. It s up to us to pick them up at any moment .Let us be thankful to God for all the precious gifts that are given and hidden in ourselves. Which we are bringing out happily from the treasury boxes in this year of gratitude.

**Sr. Jude Madutheen**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த பியன் வெனு ?

பிரான்சியப் புரட்சியின் அதி உச்ச கால கட்டத்தில்
1793 ஐப்பசி 27 ம் நாள்
நல்வரவு என்ற பெயருடன்
பத்து மழலைச் செல்வங்களைக் கொண்ட குடும்பத்தில்
எட்டாவதாக அவதரித்தார் பியன் வெனு



தாறுமாறாக தனது இளமைக் காலத்தை
களித்த போதிலும்
அன்னையின் செபத்திலும்
அருட்பணியாளர்களின் வழிநடத்தலிலும்
மரியன்னையின் பரிந்துரையிலும்
தன்னுள் உளமாற்றம் பெற்றார் பியன் வெனு

நிறை வாழ்வுக்கான அழைப்பை உணர்ந்து
திருப்பணி நிலைக்கு தன்னை கையளித்து
நிலையில்லாத உலகின் ஆடம்பரங்களை அகற்றி
நிலையான இறைவனுக்கு மாத்திரம் பணி செய்ய
ஆம் என்று பதிலளித்தார் பியன்வெனு

இறைவனைத் தான் அன்பு செய்தது மட்டுமல்லாமல்
இறைவனால் தான் அன்பு செய்யப்படவும் - ஆவல் கொண்டு
விசுவாசம் ஆழமான அமைதி பிறரன்பு
தாழ்மையின் ஆதாரமாகினார் பியன் வெனு


கிறிஸ்துவின் மறையைப் பரப்புவதில் அதிக கவனம் செலுத்தி
கிறிஸ்துவை அறியாத உள்ளங்களில்
கிறிஸ்துவின் மறைபரப்பாளராகி - அணைத்திட்டார்
இளையோர், அநாதைகள், கைவிடப்பட்டோர் மட்டில்
அவர்களின் இருளகற்றி நல் ஒளியேற்றி
இறைவனின் சந்நிதானம் கொண்டு சேர்ந்திட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை மாத்திரம் நேசித்து, ஆசித்து தேடிய
திருக்குடும்பத்தை சாரமாகவும்
ஆதிக்கிறிஸ்தவ குழுமத்தை மாதிரியாகவும் கொண்டு
பிளவுபட்ட, உடைந்த நொறுக்கப்பட்ட உள்ளங்களின்
விசுவாசத்தின் தேவையறிந்து
பணி செய்திட உருக்கொடுத்தார் திருக்குடும்ப சபைதனை

யேசு, மரி, சூசை மூலமாக இறைவனுக்கே மகிமை - எனும்
வாக்கிற்கேற்ப வாழ அழைப்பு விடுத்தார்
இறைவனுடனான ஐக்கியத்தையும்
தெய்வீக திட்டத்திற்கு கையளித்த ஆன்மீக பொக்கிசமே
எம் தந்தை பியன்வெனு.

**T.Libitha**
**Pre - Novice**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]

# Our being gives life for all being

Every day our people are suffering and longing to live happily one day at a time. I see the whole creation is going through painful suffering and dying because of wanting of our Love, care and concern.

In the Bible (Genesis 1: 1- 20) we can see God's works in creation, God created everything for good and seen good in them all.

God loves us very much that is why he created us in His own image and likeness, and he gave us the big responsibility to care and have concern for the whole creation. But what happened to us?, Our eyes are closed to the suffering we ourselves cause to our beautiful – God given Mother Earth. Yet she does not expect anything from us in return. But God opens our eyes through our Province to see and experience our mother' suffering and pain in our daily life.

I experience that the whole creation is open itself to accept any body and provide for the needs of all people, gives its whole self for others and die for others like our Christ Jesus. So when I am spend time with creation, it teaches me a lot of lessons to live every day meaningfully.

Being with nature gives me new life to live fruitfully in this world as a God's witnessing woman. Do you like to know these fruits? Yes I like to share with you that Love, Kindness, Mercy, Self-giving, endurance Generosity and simplicity. These have challenged me to practice in my life. Being with nature makes me happy and share my happiness with all through my works, deed and action.

When I visit sick people in hospital and in our parish. I experienced that my being becomes the healing to the sick person. When I listen to the cries of our mother earth, I feel pain in my heart. When I visit the people in our parish I see that the children have no time to spend with their parents. They feel that they are not loved and concern about so that when they start to share their life story, I see tears in their eyes but I love them with the eyes of my heart, to give new light to their life. I experience that our words and presence are powerful energy to give life for all beings which surround us. Let us be awakened and listen to the cries of our mother earth and allow our young energy to bloom and give life for all being where ever we are.

**Sr.Akila**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய காட்சி புதிய பார்வை

ஒரு நாள் காலை
பண்டத்தரிப்பு தோட்டத்தில்......
ரம்மியமான தருணமென்று
மெல்ல நடக்கின்றேன்......

தென்னையில் கட்டியிருந்த
வெள்ளைப் பசுக் கன்று
என் கால் அரவம் கேட்டதும்
விருட்டென்று நிமிர்ந்தது
விழிகளில் துளிர்த்த மிரட்சி
மனதை மருட்டியது.

அதை நோக்கியவாறு
சற்றுத் தள்ளி அமர்ந்தேன்
சிறு மவுனம்.......
கன்று பசும் புற்களை
மேயத் தொடங்கியது......



சுகமான அனுபவம்
அமைதியில் கடந்த தருணங்கள்...
திடீரென பறந்து வந்த
இரு வெள்ளைக் கொக்குகள்
துணிவுடன் இறங்கி
கன்றுடன் நடை பயின்று
இரை தேடின.....................

வெள்ளைக் கன்று (பசு), பச்சைப் புல்
வெண் கொக்குகள்
மனதை அள்ளும் இயற்கையின் ரம்மியம்
சந்தேகம் இல்லை
உன்னத இறைவன் இங்கு ....... இப்போது
“நான்” என்ற அகந்தை மறந்து
நானும் நீயும் ஒன்று என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெகிழ்ந்த நிலை..............
திடீரென தெளிவு!!!
இறை பிரசன்னம் உணரும் நிலை
இதுதானோ?
சிந்தைக்கு கிடைத்த விருந்து
இதுதானோ?
உற்று நோக்கினால் இன்னும்
கிடைக்கும் தெளிவு !!

பசுவைச் சுற்றி சுழன்றது கண்கள்
முதுகில் வந்தமர்ந்த கரும் காகம்
ஆங்காங்கே தோலில் இடம் பிடித்த இலையான்கள்
சுற்றிச் சுற்றி வந்த கொசுக்கள்
மண் பொந்தில் இருந்து எட்டிப்பார்த்த காட்டு முயல்
கன்றின் சிரத்தையை எதுவும் குழப்பவில்லை
ஒன்றாய் இருத்தலின் மகத்துவம் எனக்கு வெளிச்சமாகியது.

என்னைச் சார்ந்தும் நிகழ்வுகள் அரங்கேறின
நசித்து அழித்த கொசுக்கள்
அடித்து விரட்டியும் .... கொன்றதுமான....
இலையான்கள் ......நுளம்புகள்
பயம் காட்டி திசை திருப்பிய பஞ்சோதிகள்

ஒன்று மட்டும் தெளிவாகியது
என்னைச் சுற்றிக் கட்டப்பட்ட
மதில்களும் வேலிகளும்
இன்னும் உடைக்கப்பட வேண்டும்
நான் விரும்புவ தெல்லாம் ........
எதற்காகக் கிறிஸ்து என்னை ஆட்கொண்டாரோ
அதை நான் பற்றிக் கொள்ளலாம் என்ற
நம்பிக்கையோடு தொடர்ந்து ஓடுகின்றேன் (பிலி 4:12).

அருட்சகோதரி. அனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message - At the opening of the 7th Asian convention of Lay Association



"Glory to God Alone through Jesus Mary and Joseph". It is indeed my pleasure and privilege to welcome you all again to the 7th Asian Convention of the Lay Associates of the Holy Family Congregation of Bordeaux.

First of all let us remember our beloved brother Albano Estavillo the National President of the Philippines who has been called to rest recently after suffering the deadly cancer. He is remembered always as a gentleman who carried himself with dignity and dire faith. He has been a stalwart who shaped the lives of the Lay Associates of Philippines. May his soul and the souls of all the deceased members of the PBN Family find eternal rest in the presence of God.

This regional gathering of the Lay Associates happens every 04 years. In 2004 we gathered at pandatherippu, 2009 at Wenanappuwa, and In 2013 at pandatherippu. Once again we are meeting in the same Srilanka soil which has many a story to relate .Sri Lanka has become our 'Island' of the Asian PBN Family!

We are gathered together under the banner 'Live communion, Celebrate family and be mission in today's world", Here I wish to quote what our Holy Father Pope Francis proclaimed in Laudate Si on mission, which again was quoted by Sr..Anne Maria Alcalde our General Leader at the opening address of the Council of Family in 2015.

"I am a mission on this earth that is why I am here on earth. My mission of being in the heart of the people is not just part of my life, it is something that I cannot uproot from my being without destroying my very self".


The Holy Family of Bordeux is growing out of the box, in instilling in every member of all the 05 vocations in their different status of life the urgent call to be Mission to wholly submit ourselves to the will of God, the cry of Humanity, and to the groaning of the universe, to bring forth newness.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To explore the 'Newness', we envisage as dream by our Venerable Founder Pierre Bienvenu Noailles, these 05 days here in Wennappuwa, we the Lay Associates are entering into a secred conversation of understanding 'Our Way of Life' in the light of the rapidly changing world of today.

The family of Pierre Bienvenue Noailles constituting of 05 Vocations is motivated by the same spirit and the same aim which is a sign and leaven of unity.

We, The Lay Associates who are living in the world for the world as promoters of communion, taking the Holy Family of Nazareth as our model and following the example of the first Christian Communities, while striving to live a simple family life thereby sanctifying the ordinary and giving it meaning as Jesus Mary and Joseph did, are gathered to reiterate our role to live authentically to see the face of Christ in every person especially who are poor, victimized and excluded and much more challenge the structures which cause situations of injustice.




Dear friends, we are getting ready to celebrate our 200 years of being the Bicentenary celebrations that's a gift for any family / Congregation. but what are our mile stones as PBN Family? Has our ways means changed / adopted to be productive?

Do we really understand the world is changing?

Do we genuinely feel changes affecting us,/ the world positively and negatively?

Have we taken concrete visible steps to address issues affecting us and the world? Or are we still conducting meetings? Of course we pray and it is essential. We celebrate feasts and family festivals. Yes it is part of our lives. We do retreats, undoubldly it is an inner reflection.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

But Are we with the poor Are we with the victimized and excluded Do we challenge the structures that cause injustice?

My fervent prayer and request to all of you gathered here is, let this 7th Asian Convention of Lay Associates be a protagonist platform bringing forth ACTION /SOLUTIONS that would affirm 'ONENESS' within the PBN family and in your Local Contexts which would automatically contribute towards the higher aim of understanding Oneness of the universe.

We hope the presence of the members from each country, the blessings prayers from all of you who are present here would commit the Lay Associates to 'Go Forward' in meeting the demands of the changing world of today, by being Mission , living Communion while Celebrating family.

**Mrs. Regina Ramalingam.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு - திருக்குடும்ப மடத்தின் 75 வது யூபிலி விழா

அவையில் உள்ள அனைத்து உள்ளங்களுக்கும் இந்நேர வணக்கங்கள். கவி வடிக்க வந்துள்ளோம் ஆனால் நாம் கவிஞர்கள் அல்ல கவி என்னும் கடலை கையால் தொட முடியாதவர்கள். ஆனாலும் சிறு கவி பாட வந்துள்ளோம். ஏனென்றால் கன்னியரின் சேவை கூறாமல் இருக்க முடியவில்லை. நாற்புறமும் கடலலை தாலாட்டி காவியம் பாடும் பசுந்தீவாம் நெடுந்தீவில் நெடுங்காலமாய் நெடிய சேவையாற்றி 75 ஆண்டு நிறைவு செய்யும் திருக்குடும்ப கன்னியராக அவர் தம் பணியை கவியால் வடிக்க வந்துள்ளார் கத்தோலிக்க ஆசிரியர்கள்.



அமைதியின் உறைவிடம் அன்பான பேச்சு அனைவரிலும் அக்கறை சிறுவர்களுக்கு சிந்தனையை தூண்டும் சின்னக்கதைகள் கூறுவார் பெரிய விளான் பெற்ற மங்கை **அருட்சகோதரி கஸ்மீர்** அவரை பற்றி கவி படிக்க வருகின்றார் நிரோஜினி ஆசிரியர்

பொன்னான நன்நாளிலே இறை பணியை
இதமுடன் ஆற்றிய
அருட்சகோதரி கஸ்மீரே- நீர்
செய்த சேவையினை வாழ்த்திக் கூற
நான் வந்தேன்.




1932 ஆவணி ஒன்றில்
சூசைப் பிள்ளை மரியப்பிள்ளையின்
புதல்வியாக அவதரித்தீர்
சிறு வயது முதல் ஒழுக்கமும்
இறை விசுவாசமும், மரியன்னை பக்தியும் கொண்டு
சீராக வளர்க்கப்பட்டு இறை
குரலுக்கு செவி கொடுத்தீர்
இறை சித்தம் இது என – எம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுதனில் திடமாக பணி பல செய்தீர்.
சிறு பிள்ளைப் பேச்சும்
சினமில்லா சிரிப்பும் எம்
எல்லோரையும் கவர்ந்திட்டதே
திருப்பாலர் சபை போசகராக
செயற்பட்டு சிறிய மறைத்
தூதுவராக மாற்றினீர்– எம்
ஊர்தனில் தொண்டாற்ற – வந்து
ஊராரின் மனதில் - எல்லாம்
நிரந்தரமாய் குடிகொண்டீர்
நீர் செய்த சேவையினை உளமதில் கொண்டு
இறையாசீர் பெற்று இகமதில்
வாழ வாழ்த்துகின்றோம்.



மூவொரு இறைவனின் முப் பணியை எம் தீவில் மும் முறை வந்து பணியாற்றியதோடு பாலர் சபையை தொடங்கி வைத்த கன்னி பாசமுடன் தேடிச் சென்று பலரின் பசி போக்கிய அமுத சுரபி வள்ளல்தாய் வங்காலை ஈன்ற மகள் அவள் தான் **அருட்சகோதரி பிரான்சிஸ்கா** அவரின் நிஜங்களை எடுத்து கவி பாட வருகின்றார் நிசானி ஆசிரியர்





அருட்சகோதரி பிரான்சிஸ்கா குரூசே
அருள் பணி புரிந்திட வேண்டியே
அயராத முயற்சி கொண்டு
அன்புடன் எம் தீவில் வந்திட்டீர்.
திருக்குடும்ப கன்னியர் என்றாலே
திடகாத்திரம் தானாக வந்திடுமோ?
துடிப்புடனே இத்தனை வயதிலும்
துணிவுடனே மீண்டும் வந்து பணி செய்தீர்.
கருணை உள்ளம் தனை மறைத்து – முகத்தில்
கண்டிப்புடன் காண்போரை நடுங்க வைத்து
காரசாரமாய் பூசைக்கு வந்தாயோ - என்று
கடவுள் பக்கம் திருப்பிடும் உள்ளம் நீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதாய் உறவாடி இல்லங்கள் தோறும்
இறைவனின் தூதுவராய் நடை பயில்வார்
இளைஞர் யுவதிகளை – வழி மறித்து
ஈர்ந்திடுவார் பல புத்திமதிகளை
திருப்பாலத்துவ சபை வளர்ச்சியிலே
தினமும் அவர் வழிகாட்டியாய் இருந்திட்டார்
சிறுவர்களை இறைவன் பால் கொண்டு செல்லும்
சீரிய சிந்தனை கொண்டவரே.

மூன்றாவது தடவையும் எம் தீவினுக்கு
முதுமைக் காலத்திலும் முடியாது என்றிருந்திடாது
முறிந்து மற்றும் விலகிப் போன குடும்பங்களை
மீண்டும் எம் திருச்சபைக்குள் சேர்த்திட
முழு மூச்சாய் உழைத்திட்ட சோதரியே!

முடிந்திடாது உம் இறை பணி வாழ்வு
முழுமையாய் எல்லோருக்கும் அருள் கிடைத்திட
மனமுவந்து வாழ்த்துகின்றோம்
மகிழ்வுடன் வாழியவே வாழியவே.



நிமிர்ந்த நன்னடை,
நேர் கொண்ட பார்வை
நிலத்தினில் யாருக்கும் அஞ்சாத தன்மை
இது பாரதி கண்ட புதுமைப் பெண்
அன்று அவன் கண்ட கனவை
இன்று நிஜமாக மாற்றிய சாதனைப் பெண்
பாடசாலையை கல்லூரியாக மாற்றிய சரித்திர நாயகி கொழும்பு மண் தந்த **அருட்சகோதரி ஜெயசிலி ரொற்றிக்கோ** இவர் செய்த சேவையை இசைப்பாவால் தொடுக்க வருகிறார் விறிடா ஆசிரியர்




கல்விச்சாலையில் அதிபராய்
கால் பதித்த நாள் முதல்
கண்துஞ்சா நெஞ்சினள் கருமமே கண்ணாக
காரியம் சாதிக்கும் காவிய தலைவியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வேலைகளிலும் சரி பாடசாலை வேலைகளிலும் சரி
அழகான கன்னியர் மடம் அமைப்பதிலும் சரி
அவருக்கு நிகர் அவரே தான்

விவேகமும் வேகமும் ஒன்று சேர
விடா முயற்சியுடன் கன்னியர் மடத்தை
வியக்கவைத்த வீரமகள் அவர்.

நிர்வாகம் செய்வதில் நிகரற்றவர்
நிறைந்த ஒழுக்க விதிகளுடன் - நிறைவான
மாணவரை உருவாக்கிய நேசமிகு தலைவி அவர்

அறிவு நிறை பேச்சு அழகான புன்னகை
அனைவரும் விரும்பும் நல்மனம்
ஆன்மீன பணியிலும் அயலவர் தேவைகளிலும்
அயராது தம்மை அர்ப்பணித்த தலைவி அவர்

பொய்யில்லை புரட்டில்லை இதுவெறும் -புகழ்ச்சியில்லை
பண்புக்கும் பணிவான நடத்தைக்கும் - எம்
பசுந்தீவின் வளர்ச்சிக்கும் பத்தாண்டுகள் - இவர்
புரிந்திட்ட சேவைக்கும் - எம்மவரின்
பணிவான நன்றிகளும் வாழ்த்துக்கள்



ஆபிரிக்கா கண்டம் தொடக்கம்
ஐரோப்பா கண்டம் வரை
சென்று பணியாற்றினாலும்
ஆசியாக்கண்டதிலும் அன்பு கொண்டு
இலங்கைத் தீவிலும் நெடுந்தீவுக்கு
இருமுறை விஜயம் செய்துதனது
அனுபவங்களை பகிர்ந்து
சிரித்த முகத்துடன் வலம் வந்ததோடு
வெள்ளி என்றால் பள்ளிகளுக்குச் சென்று
வேதம் பரவ வழி கொடுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன ரோமாம் சில்லாலையில் மலர்ந்த
மல்லிகையாம் **அருட்சகோதரி பிறிச்ஜட் மல்லிகாவின்**
மனம் மலர கவி படிக்க வருகிறார் கிருசாந்தி
ஆசிரியர்




விண் தந்த மலராய் -
எம்மண்ணிற்கு வருகை தந்தீர்
வாடா உன் முகம் கண்டு
எம் பங்கே மகிழ்ந்ததம்மா!!

சில்லாலை ஈன்றெடுத்த செல்லப் புதல்வியே– உன்
சொல்லாலே எம்மையெல்லாம் சிந்திக்க வைத்ததென்ன
ஆண்டவன் பணியில் உமை இணைத்து
ஆபிரிக்கா தேசமெங்கும்
மறைதூதுப் பணியாற்றிய — எம்
மல்லிகா சிஸ்டரை நாம் மனதார வாழ்துகின்றோம்.
இறை பணிக்கென எம் ஊரில்
இரு தடவை கால் பதித்தீர் என்றும் - உம்
சேவை அழியாது எம் மண்ணில்
வெள்ளியென்றதும் எம் பள்ளிகளில்
பவனி வந்து காலைப்பிராத்தனையில் - உம்
நற்சிந்தனையில் நாம் மகிழ
அன்பான பண்பும் கனிவான பேச்சும்
கடமையை உடமையாக்கி கொண்ட செயலும்
காலெமெல்லாம் வாழ வேண்டும்.
அசையா நம்பிக்கையுடன் ஆண்டவரின் பணிதனிலே
வெல்லும் உறுதியுடன் வீர நடை போடவும்
வியத்தகு சாதனைகள் புரியவும்
வாழ்த்துகிறோம் எம் அருட்சகோதரியை

முன்பள்ளிகள் தோறும் சென்று
நற்பணி புரிந்தீர்
திருப்பாலத்துவ சபையினது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடும்ப பொது நிலையினர் உருவாக்கத்திலும்
ஊக்குவிப்பாளராய் இருந்து
உயரிய சேவையாற்றினீர்

முதியோர், நோயாளரை தேடி நீர் சென்று
முகம் மலர்ந்த உம் பேச்சால்
அவர்கள் அன்னையாய் ஆனீர்
நிறைவான வாழ்வும் நீடித்த ஆயுளும்
உம் வாழ்வில் செழித்தோங்க
எம் பங்கின் திருக்குடும்ப துறவற சபையின்
யூபிலி தினமதில் வாழ்த்துகின்றோம்



அழகும் பொலிவும் கொண்டவராய் அன்பர்
இயேசுவின் பணிக்காய் வந்தவராய் - எம்
மண்ணின் ஞான வெளிச்சத்திற்கு வழிகாட்டிய
மன்னாரின் மாணிக்கம் அருட்சகோதரி பிறிடாவின்
சேவை கூற ஜெயமுடன் வருகின்றார் ஜெயமலர்
ஆசிரியர்.

தொண்ணூற்று ஆறாம் ஆண்டினில்
தொன்மைச்சான்றுள்ள நெடுந்தீவில்
தோள் நின்று சமயத் தொண்டாற்றிட
துணிவுடன் வந்தார்
அருட்சகோதரி பிறிடா ஸ்ரனிஸ்லொஸ்.




ஆன்மீகப் பணியில் அயராது உழைத்திட்டார்
அன்புள்ளம் கொண்ட அவர்
அன்பிய குழுமங்களை உருவாக்கிட
அயராது உழைத்து நின்றார்
கருணை மனம் படைத்திட்டார்
கடவுள் அன்பில் உருவானவர்
கனிவான பேச்சுடன் கவர்ந்திடும் புன்னகையும்
கண்ணியமாய் தோன்றிடும் உருவுடையார்.
பேதங்கள் எம்மிடையே பார்க்காதவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத நெறி நின்று வழுவாதவர்
கூசாமல் அறிவுரைகள் கூறி - இந்த
குவலய ஒற்றுமைக்கு அணி செய்தார்.

கொஞ்ச காலம் எம்முடன் இருந்தாலும்
குறைவில்லா பணியினை ஆற்றியிருந்தீர்
கோயில் மாறி மாறி வரும் விழாக்களுக்கு
கூடி எம்மோடு துணை நின்றார்.

அவர் ஆன்மீகப் பணியினில்
அயர்வின்றி சோர்வின்றி — என்நாளும்
அயராது சேவை செய்ய அருள் வேண்டி
அன்புடனே அருட்சகோதரியை வாழ்த்துகின்றோம்.



கல்வி தொடங்கி கபடி வரை
வெற்றி கண்டு தடம் பதித்ததோடு
கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
என்னும் பழ மொழிக்கேற்க
எம் தீவில் எதிர் நீச்சல் போட்டு
எற்றத்திற்கு வழி காட்டிய
சின்னக்குயில் சித்திரா

மண்டை தீவு தந்துதவிய
**அருட்சகோதரி லுமினா ஜோச்சின்**
ஆக்கத்தினை அள்ளி வீச
வருகின்றார் அருள்நேசன் ஆசிரியர்.
மண்டைதீவு மண் தந்த அருட்சகோதரியே
75 வது யூபிலியில் உம்மை
வாழ்த்த வந்திருக்கின்றோம்.

கடலலைகள் முத்தமிடும் - எம்
பசுந்தீவாம் நெடுந்தீவில்
2014 ம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்கள்
அருட்சகோதரியாய் அதிபராய்
எம் தீவில் கன்னியர் மடத் தலைவியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும் பணியாற்றிய அருட்சகோதரியே
மேரி யூட் லுமினா ஜோர்ச் அவர்களே
உம் சேவைஅகிலமெங்கும் புகழ் பெறும்
ஆன்மீகப் பணியிலும் கல்விப் பணியிலும்,
விளையாட்டிலும்
ஆற்றிய சேவை அளப்பெரியது
சிலுவைச்சுமைகள் வந்த போதும்
துவண்டு விடாமல் துணிச்சலுடன்
உந்தன் பணி எந்நேரமும்
என்றுமே மறக்காது.
அன்பான சிரிப்பும் கண்டிப்பான பார்வையும்
கல்விப் புலத்தாரையே அதிர வைத்தது
இரவு பகலென்று பாராத உம் சேவையால்
கல்வி தரத்தையே உயர வைத்தாய்
எம் தீவின் நன்றி உமக்குரியதே.




கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பது போல
உருவத்தில் சிறியவராக இருந்தாலும்
பொறுப்பில் பெரியவராய் காட்டி நிற்கின்றீர்
ஏழையின் சிரிப்பில் இறைவனைத் தெரியும் என்பது போல
உந்தன் சிரிப்பால் இறைவனையே உணர்த்தி நின்றாய்.
வாழ்க உம் பணி வளர்க உம் சேவை.



அமைதியான உருவம் அன்பான கன்னி
ஆறுதல் வார்த்தை கூறும் பரமனின் தோழி
பள்ளிமுனையின் பைங்கிளி
அருட்சகோதரி அனற்றாவின்
சாதனையை கவி வடிக்க வருகிறார்
சாந்தி ஆசிரியர்.




இறை பணியை இதமுடன் ஆற்றி வரும்
அருட்சகோதரி அனற்றாவே
நீர் செய்த பணியை வாழ்த்திக் கூற
நான் வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பணிகள் செய்யவென
வாஞ்சையோடு இருந்தவர்க்கு
திருக்குடும்ப சபை இதுவாம்
பாதை பல காட்டியது
அவ்வழியே இணைந்து விட
ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஒன்பதிலே
ஆண்டவரின் சேவகியாய்
துறவு நிலையை புகுந்து விட்டார்.

ஆழியினால் சூழப்பட்ட எம் தீவு
யுத்தத்தின் தாண்டவத்தால்
தனித்தீவாய் இருந்த காலம் அது
அன்னமின்றி மின்சாரமுமின்றி

அடுத்தாரின் துணையுமின்றி
அல்லல்பட்டு நாம் இங்கு
அயல் நாடு செல்லவென
ஆயத்தம் புரிந்த காலமதில் - எமை
ஆறுதல் படுத்தி ஆன்மீகத்தில் வளர்த்திட
அடியெடுத்து வைத்தார்.

துன்பப்படும் மக்களுக்கு ஆறுதலாய்
நோயுற்ற மக்களுக்கு வைத்தியராய்
கல்வித்துறையில் நல் ஆசானாய்
சேவை ஆற்றிய திருக்குடும்ப சபையுடன்
இணைகின்றாள் இவரும் ஒருத்தியாய்
வாழ்க வளமுடன்.




உயர்ந்த உருவமும் உயர்ந்த எண்ணமும்
உயர்ந்த குணமும் தான் உம்மிடம் காணப்பட்டது
உதவும் கரங்களும் உமக்குரியவை
உன்னத தேவனின் உயரிய பணியை உவப்புடன்
செய்த கொழும்புத்துறை - தந்த
செல்வ மலர் அருட்சகோதரி செல்வியின் பணி
கூற ஆசிரியர் அமலதாஸ் வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான பேச்சு ஆறுதலான வாழ்க்கை
எதையும் சகித்துக் கொள்ளும்
முகம் மாறா புன்னகை
அருட்சகோதரி செல்வியே



அமலதாஸ்

கடல்கடந்து வந்த கனிவான கன்னி
செய்கின்ற வேலைகளிலே நுட்பம் - இது
உம்மில் நாம் கண்டு கொண்ட பண்பு
சிறுவருடன் உரையாடும் - அவர்
மழலையாக மாறிவிடும் மாயம்தான் என்ன
பாடங்கள் கற்பிப்பதிலும் பாடல்கள் பழக்குவதிலும்
உமக்கு நிகர் நீர்தான்

எம்பணி தொடரட்டும் உம்நலம் பெருகட்டும்
உம்வழி சிறக்கட்டும்
நலம் பல பெற்று வாழ்க

உணவில்லை என்று ஒதுங்கியவரல்ல இவர்கள் சபை
துன்பம் என்று கூறி விலகியவரல்ல இவர்கள் சபை
கனிவுடன் செயலாற்ற விரைந்தது இவர்கள் சபை

எம் தீவில் இவர்கள் செய்த அர்ப்பணிப்பான
வளம் கொழிக்கும் வன்னி மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருந்தோம். போரின் கொடூரத்தினால் வாழ்வின் அடிப்படை உரிமைகளை இழந்து உயிரைமட்டும் தக்கவைத்துக் கொண்டால் போதும் என்ற மனநிலையுடன் பல்வேறு துன்பங்களைக் கடந்து உறவுகளை,தாய், தந்தையை இழந்து அகதிகளாய் பல இடங்களுக்கு அலைந்து திரிந்தோம். எம் வாழ்வில் மாற்றம் எதும் உண்டா என்ற கேள்வியுடன் மீண்டும் எம் மண்ணில் மீள் குடியமர்த்தப்பட்டோம்.



வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த எமக்கு கிராம அலுவலர் ஊடாக காற்றுடன் கலந்து வந்தது ஒரு நல்ல செய்தி. "மாற்றத்துக்கான இளைஞர்கள்" என்ற தலைப்பில் திருக்குடும்ப சபை அங்கத்தவர்களால் நாடத்தப்படும் செயல்திட்டம் ஞாயிறு தோறும் நடத்தப்படும். இவ்ஒன்று கூடலில் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது. வாழ்க்கை என்றால் என்ன? என்றும் வாழ்வில் அமைதியை யும் சந்தோசத்தையும் உள்ளத்தில் எவ்வாறு அனுபவிப்பது. என்னும் பல கருத்துக்கள் பகிரப்பட்டது.



எவ்வாறு சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையையும், தலைமைத்துவ பண்பையும் எம்மில் புதைந்துள்ள திறமைகளை நாங்கள் இனங்கண்டு எம்மிடையே ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்கவும், நான் யார் என்று அறியவும், பாதிக்கப்பட்ட மனதுக்கு ஆற்றுப்படுத்தல் மூலம் விடுதலையும், மனநிறைவையும் இச் செயற்திட்டம் தந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர் என்றால் வெறுக்கும் மனப்பான்மையில் பார்க்கும் எம் மனநிலையை மாற்றி அவர்களும் எம் உறவுகள், நல்லவர்கள் என்ற மனநிலை மாற்றத்தை உருவாக்கி னார்கள். இதற்கு அவர் களின் வருகையும் இரண்டு நாள் ஒன்று கூடலும் உதவியது. மொழி தெரியா விட்டாலும் கண்களால் எம் நிலை அறிந்து கொண்டார்கள் எம் இழப்புக்களை புரிந்து கொண்டார்கள்.



அருட்சகோதரிகள் எமது பொழுது போக்கிற்காக எமது அறிவுப் பசியைப் போக்க பல்வேறுபட்ட புத்தகங்கள் எமக்குத் தந்துதவினார்கள். பின்னல், கைத்தையல் என வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி தங்களுக்கு வசதியான நேரத்தில் அமர்வுகளை தவிர்த்து எமக்கு வசதியான நேரத்தில் அமர்வுகளை வைத்து எம்வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளார்கள்.

இறுதியாக வாழ்வாதாரம் எனும் உதவியினை தந்து, எமது கை வண்ணங்களை கண் காட்சியாக காண்பித்து, நடனம், நாடகம் என பல நிகழ்வினை செய்து எம்மை வளப்படுத்திய இவர்களின் பணிகள் மென்மேலும் தொடர வேண்டும். இன்னும் மாற்றத்திற்கான இளைஞர்களை காண வேண்டும். தொடர்ந்து இவர்களின் பணி எம்முடன் தொடர வாழ்த்தி நிற்கின்றோம்.

மனமே வாழ்வின் மகிழ்வு
வாழ்க வளமுடன்
மல்லாவி இளைஞர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்டி பெட்டி பெட்டி

இவ்வருடம் எனது விடுமுறையை கழிக்க இலங்கை வந்த போது வருடாந்த தியானத்தை மேற்கொள்ள ஆசை கொண்டேன். அதற்கான அனுமதியும் கிடைத்து. எனது தியானத்தை 25 சகோதரிகள் கொண்ட குழுவுடன் இளவாலையில் மேற் கொண்டேன். இந்த வாய்ப்பை எண்ணி மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். எனது எண்ண அலைகளை வார்த்தையில் வடிக்கின்றேன் இங்கு....

பெட்டி பெட்டி பெட்டி
அடுக்குப் பெட்டி அப்பப் பெட்டி
முட்டைப் பெட்டி முறுக்குப் பெட்டி
நீத்துப் பெட்டி நீளப் பெட்டி
கடகப் பெட்டி தட்டைப் பெட்டி
அப்பப்பா பலவித பெட்டிகள்!!!





எனக்கொரு பெட்டி உனக்கொரு பெட்டி
அவனுக்கு அந்தப்பெட்டி
இவனுக்கு இந்தப் பெட்டி
எல்லோர்க்கும் ஏற்ற பெட்டி



இந்தப் பெட்டிகளைச் செய்தவன் யார்?
நீயா? நானா? அல்லது அடுத்தவனா?
யாரும் அல்ல... அது நானே தான்

பெட்டியை எனக்கு செய்தவனும் நானே
மற்றவருக்கும் செய்தது நானே
வேறு எவரும் இல்லை... நானே தான்.


ஏன் செய்தேன்? சுயநலமா? கோழைத்தனமா?
பயமா? அல்லது இறை அனுபவம் இல்லையா?
நேரத்தை வீணடிக்கும் வேலையா?...

8331(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாத புதிரே!
கருவில் இருந்த போது ஒரு பெட்டிக்குள்
இறந்தபின் இருக்கப் போவது சவப்பெட்டி
இந்த இரு பெட்டிக்குமிடையில்
பிரமாண்டமான வானையும்
பூமியையும் கடலையும்
காற்றையும் திறந்த வெளியையும்
அதன் சக்திகளையும்
தந்திருக்கும் இறைவனுக்கு
நான் கொடுக்கும் பரிசா இந்த பெட்டி?
புரியாத புதிர் என்னும் இந்த பெட்டிகளுக்குள்
இருந்து விடுதலை பெற இறைவா வரம் தாரும்.



**Sr. Rosita Kurusumuthu**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

# Message - Visit to the humanitarian project



Dear participants of our humanitarian project, dear members of the Holy Family, dear Father and all those who are present here.

It is a great joy for me to be present here among you. You are very close to the heart of the members of the Holy Family all over the world. They think of you, pray for you and make sacrifices so that together we can make this project fruitful to all of you and all the members of the big family of P.B.Noailles. I feel privileged to be here with you in a personal way to meet you and listen to you. The time is very short but let quality of our presence and exchange be meaningful and fruitful. Let it bring joy to all of us.

As the co-coordinator of the bicentenary celebration team, I greet all of you on behalf of all the members of the Noailles family. I regret that Fr. Jean Louis from the permanent committee could not be present with us. He was to come to Sri Lanka from Bordeaux to attend the Priest associates International Co-ordinators meeting and he was delighted when I made the proposal to visit this project together. But unfortunately his health condition did not permit him to make the trip to Sri Lanka. His doctor advised him not to travel and he had no choice except to take it and he did it with regret. Let us pray for his health.



Dear brothers and sisters thank you for coming forward to be part of this project. Thank you for the love, and enthusiasm with which you participate. We see it in the reports and pictures we receive. Pleace remember that the whole family of P.B. Noallies, along with their collaborators and co- workers are



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

interested in you, love you and wish you well. Recently I read in the jubilee blog, the children in Spain saying: "we are raising funds for the project and we are also learning about this country and its people. It is more than contributing money, It is being interested in people and being bonded with them. Tough this project you have become part of us. Through this work, may you find healing peace within you and around you and meaningful activity and relationships! May a bond be created among you that will last beyond this project so that you will become brothers and sisters to one another who will be there when one needs the other. This is what our dear Good Father sought the communion among all.

Our Founder Fr. P.B. Noailles whom we call Good Father lived and worked in the post revolutionary era in France. Today we are working in the post war ear in Sri Lanka. His spirit guides us in the task of rebuilding our lives our relationships and our society. May this project help you to find the energy needed for this task of rebuilding! May you be transformed and be agents of transformation! Dear members of the Noailles Family who are engaged in this project, thank you for the love with which you engaged yourself in this project. Thank you for the time and labour you spent on behalf of us all. It is the project of the whole Noailles Family at which you work on behalf of us all. So on behalf of all the members of the Family, I say 'a very big thanks you' to each one of you.

My gratitude also goes to all those who are directly and indirectly contributing to the project in various way. I owe also a special word of thank to Sr. Labora Mary who not only works whole heartedly on the project on the spot but also does everything necessary to communicate with the whole family. She is very quick in sending information reports, picture etc..... to be shared by all. Thank you for making arrangements for this visit. I appreciate very much your communications and the way you consult the persons concerned before making any decision. May God bless all of us! May we be able to walk together in achieving the objective theme in mind: Live communion celebrate family". Let this very project be an occasion to live communion and celebrate family. Once again thank you.

**Sr. Winifreda Wasalathanthrige**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைச் சிதறல்கள்

- இறைவனும் நானும் என்ற மனப்போக்கில் வாழ்ந்தது அந்தக் காலம் முழு பிரபஞ்சத்திலுமே இறைவனைச் சுவைப்பது இந்தக்காலம்
- இறைவன் மேலே உள்ளார் அவரை அனுக முடியாது என வாழ்ந்தது அந்தக்காலம் படைப்பனைத்திலுமே இறை பிரசன்னம் காண்பது இந்தக்காலம்.
- படைப்பனைத்தையும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தது அந்தக்காலம் அவற்றை இதயக் கண்களால் பார்த்து இரசிப்பது இந்தக்காலம்
- வெறும் வாய்ச் செபங்களை சொல்லுவதில் மனத்திருப்தி அடைந்தது அந்தக்காலம், ஆழ்நிலைத் தியானத்தில் தெய்வீக சக்தியை சுவைப்பது இந்தக்காலம்.
- இறைவனுக்கு பல உருவம் கொடுத்து வாழ்ந்தது அந்தக்காலம் உருவமில்லா இறைவனை முழுப்பிரபங்சத்திலும் சுவைப்பது இந்தக்காலம்.
- நான் ஒரு தனி நபர் என வாழ்ந்தது அந்தக்காலம் படைப் பனைத்திற்கும் நான் சொந்தக்காறி என வாழ்வது இந்தக்காலம்.
- பாரம்பரிய முறையில் பழக்கப்பட்ட விதத்தில் வாழ்ந்தது அந்தக்காலம் நம்முள்ளே உறையும் தெய்வீகத்தை புதிதாகக் காணுவது இந்தக்காலம்
- புவி வேறு நான் வேறு என்று வாழ்ந்தது அந்தக்காலம் பூமித்தாய் என அன்பொழுக அழைப்பது இந்தக்காலம்.
- புவியின் காத்திரம் தெரியாமல் வாழ்ந்தது அந்தக்காலம் என் தெய்வம் வாழும் பூமி இது; எத்துனை அழகு இது எனப் பாடுவது இந்தக்காலம்.
- பழையவற்றில் ஊறி பழமையைப் பேணியது அந்தக்காலம் இதயத்தின் கண்களால் புதியவற்றைப் பார்ப்பது இந்தக்காலம்.
- அர்ப்பண வாழ்வை குழுமத்தில் மட்டும் வாழ்ந்தது அந்தக்காலம் அதை முழுப்பிரபஞ்சத்தோடும் வாழுகின்றோம் இந்தக்காலம்.

அருட்சகோதரி றோஸ்மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Got to know – the P B N Family

We, Vasuki, Quincy and Mithusha went to Negombo with Rev. Sr. Thayanayaki Sebamalai for a workshop. We represented the J/Holy Family Convent, there were some other school students too, who participated in this programme.



In this programme we learned a lot of things, first of all, we learned about unity, we lived and experienced it in our lives. We worked together in all the activities and we interacted with one another without any problem and we built up good relationships with the others.

All who had come there, had come from different parts of the country, but we understood each other and we were relating like brothers and sisters. When we visited the Elderly Sisters, we felt they were like our parents and we loved them and they took care of us.

We stayed in the homes of our P B N family members in the South but we didn't experience any difficulties and stayed there for a day. While we were there, they didn't show any difference, but invited us graciously and treated us kindly like their relatives.

From our participation in this programme we learned one thing that is: we have to spend time with others happily and with good motivation, it is then that we can build up trust and good relationships with others.

Finally we thanked our former Principal Rev. Sr. Thayanayki Sebamalai and the other Sisters for giving us this wonderful experience.

**Vasuki, Quincy and Mithusha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் தேடல்

இறைவனால் படைக்கப்பட்ட இந்த பட்டாம் பூச்சி இறை அன்பை தேனிலும் சுவையாக சுவைத்தது. சுவையில் மூழ்கிய பட்டாம் பூச்சி தனது வாழ் நாள் எல்லாம், இறை அன்பை மேலும் சுவைக்க தாகம் கொண்டு தனது தேடலை தொடங்கியது.

ஒரு நாள் இறைவனின் அன்பைச் சுவைக்க ஒரு மலர் மேல் அமர்ந்து இருந்தது. அந்த மலரை பார்த்து கேட்டதாம் "நான் உன்மேல் அமர்ந்து இருக்கின்றேனே உனக்கு சுமையாக இல்லையா"? அதற்கு அந்த மலர் இனிமையாக சொன்னதாம் "உனது சுமையை தாங்க இறைவன் எனக்கு பலத்தை தந்திருக்கின்றார்". நான் இறைவனின் படைப்பு, நான் எனக்காக வாழவில்லை மற்றவர்களுக்காக வாழ்கின்றேன். மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்தவும், உன்னை போன்றவர்களுக்கு உணவு அளிக்கவும், என்னிடம் வந்து என்னை பார்த்து இரசிப்பவர்களுக்கு மனதில் நிம்மதியையும், அமைதியையும், கொடுக்கவும். அதுமட்டுமா? பிறரின் தேவைக்காக என் வாழ்வையே அர்ப்பணிக்கின்றேன் என்றதாம்.

இதனை கேட்ட பட்டாம் பூச்சி, உனது வாழ்வால் இறை அன்பை உணர்ந்தேன் என்று கூறி தனது தேடலின் தொடர்ச்சியிலே யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நுளைந்தது. அங்கு உள்ள இடங்களை எல்லாம் சுற்றி வலம் வந்தது. இயற்கையால் சூழப்பட்ட பகுதியை கண்டதும், பெரும் ஆனந்தம் கொண்டு தனது உள்ளத்திலே சொன்னதாம் இறைவனின் அன்பை பல விதங்களில் சுவைக்க பொருத்தமான இடம் இது என்பதை உணர்ந்து அங்குள்ள பூந்தோட்டமொன்றில் அமர்ந்திருந்தது. அப்போது மாலை நேரம், நொந்த பூமிக்கு உயிர் கொடுக்கும் நேரம்........

இறை அன்பை சுவைக்க தாகத்தோடு அமர்த்திருந்துது. அப்போது பூமித்தாயின் தாகம் தீர்க்க, அன்போடு கலந்த கரிசனை காட்ட, சிறுவர்கள் அந்த தோட்டம் நோக்கி வந்தார்கள். வந்தவர்கள் தோட்டத்திலுள்ள மரங்களுக்கு தண்ணீா உற்றி,சுத்தம் செய்து, பசளை போட்டு அன்பாக கரிசனையாக பராமரித்ததை கவனித்த பட்டாம் பூச்சி, இவர்கள் பூமிதாய் மீது கொண்ட அன்பை உணர்ந்து, தன்னை இவர்கள் எவ்வாறு அன்பு செய்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள ஆவல் கொண்டு அந்த தோட்டத்தை சுற்றி வந்தது. இதனை கண்ட சிறுவர்கள் அதனை பிடிக்க முயற்சி செய்தார்கள் ஆனால் முடியவில்லை களைப்படைந்த சிறுவர்கள் அந்த தோட்டத்தில் சற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறினார்கள் அப்போது பட்டாம் பூச்சியும் ஒரு பூ மரத்தில் அமர்ந்து அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அவதானித்தது.

அந்த பட்டாம் பூச்சியை பாத்திர்களா எவ்வளவு அழகாக இறைவன் அதனை படைத்திருக்கின்றார், அதனால் நாம் இன்று மகிழ்ச்சி அடைந்தோம் எனவே இன்று நாம் இறைவனுக்கு நன்றி கூறி போற்றி புகழுவோம் என்று ஒரு சிறுவன் கூறினான். அதனை கேட்டுக் கொண்டு இருந்த பட்டாம் பூச்சி தனது உயிரையும் பெரிது படுத்தாது அவர்கள் மத்தியில் வந்து அமர்ந்தது. இதனை கண்ட சிறுவர்கள் அன்பான பார்வையால் தங்களின் அன்பை பட்டாம் பூச்சியுடன் பகிர்ந்தார்கள். இந்த பேரின்பத்தில் மூழ்கி இறை அன்பில் இரண்டற கலக்க அந்த பூந்தோட்டத்திலே தங்கி விட்டது. ஆனால் பட்டாம் பூச்சிக்கு ஒரு ஆசை வந்தது இந்த திருக்குடும்ப கன்னியர் மடத்தில் உள்ள சிறுவர்கள் பூமிதாய் மட்டில் அன்பாக, கரிசனையாக இருக்கின்றார்களே இதற்கு காரணம் என்ன? என்பதை அறிய ஆவல் கொண்டு அந்த தோட்டத்திலேயே காத்திருந்து. காத்திருந்ததற்கான பலனை கண்டது பட்டாம் பூச்சி.

அது ஒரு மாலை நேரம், ஒரு அருட்சகோதரி அந்த தோட்டத்திற்குள் வந்து தனது ஆழ்நிலை தியானத்தை செய்ய ஒரு இடத்தைத் தெரிவு செய்து தனது தியானத்தை தொடர்ந்தாள், இதனை கண்ட பட்டாம் பூச்சி மகிழ்சியில் அங்கும் இங்கும் பறந்து திரிந்து தனது கேள்விக்கான பதிலை கண்டு கொள்ள ஆவலுடன் சகோதரியின் முன்பாக வந்து அமர்ந்தது. எப்போது தன்னை பார்ப்பாள் என்ற தாகத்தோடு காத்திருந்தது, தியானத்தை முடித்த அருட்சகோதரி கண் விழித்த போது பட்டாம் பூச்சியைக் கண்டாள் புன்சிரிப்புடன் அதனுடன் உரையாடினாள்.

பட்டாம் பூச்சியோ!

இறை அன்பை சகோதரியின் கண்களில் கண்டது,
இனிமையான வார்த்தையால் ஆறுதலை உணர்ந்தது
அன்பான அரவணைப்பால் தாய் அன்பை உணர்ந்தது
இறை அன்பை சுவைக்க ஆழ்தியானமே சிறந்தது என உணர்ந்து
தனது வாழ்வையே தியானத்தில் கழித்து இறைவனுடன்
சங்கமமானது.பட்டாம் பூச்சியைப் போன்று தேடலை
தொடங்குவோம் இறைவனுடன் சங்கமமாவோம்.


**Sr. Akila**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A heart filled with gratitude

St.Luke tells the healing of 10 men healed of leprosy all were cured but one returned to give thanks. Human nature has evolved only little in 2000 years. It's not that we do not want to offer thanks to God, but it just doesn't seem to come naturally. Our inclination is to consider our needs first. How many of us as children, promised God all the prayers in the world if only God would do this one thing for us? We rarely stick to our side of the bargain now as then, we should listen to the rebuke of our lord, "Were not all ten cleansed? Where are the other nine? Was none found to return and give praise to God except this one foreigner?" (Luk 17: 17)

Like the nine cured lepers we too really forget to thank the author of our happiness. But giving thanks is not an optional gesture it is a Christian requirement. As st.Paul writes, "Give thanks in all circumstances, for this is God's will for you" ( 1Thess5:18) It does take an effort for our thanks to outnumber our requests but God sees our meager efforts to die to self and showers blessing on them. With each thanksgiving we offer him. He pays us back in grace. you just cannot out give God in generosity as St. Luke describes "give and it will be given to you, a good measure, pressed down, Shaken together and running over will be poured into your lap" (Luck6:38)




**First** our faith is strengthened. In thank God is to acknowledge His existence, his power and His direct involvement in our lives. Every act of thanksgiving real to us as we acknowledge Him in the smallest details of our lives.**Second**it increases our trust with so many needs and wants weighting on our minds, it takes converge to leave them to one side simply to offer thanksgiving. Our instinct is to a "please" onto each prayer, lest we should miss our on what we really want. to forget self for the sake of Him is an expression of trust in His providence. **Third** thanksgiving increases our humility, so helping us to grow in holiness.when we ask God



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for things, we are focusing on our needs, when we thank God for things, the focus automatically shifts from me to his God 's goodness is now the object of our prayer and we can only be humble in praise before his. As we allow Him to grow greater so we grow smaller. **Forth** to offer thanks giving us an instant short of positivitly. The prerequisitie for thanking God is to bring for mind something for which we are grateful. So offen such thoughts do not come naturally we tend towards the negative and fall in to a rut of recognizing only what is imperfect in our lives. But if we have resolved to thank God we have no choice but to dig deep until we find something for which we are thankful. There will always be something we might never have considered had we not forced ourselves. For that one moment we are thinking positively about the good in our lives which can have an immeasurable effect.




Through a simple"thank you" we are strengthened in faith made holy and made more happy. Small wonder the prayer of the psalmist is Lord lend me a heart replete with thankfulness, it's one new life resolution worth sticking.

**Sr. Subajini**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நிறுவனம் யாழ்ப்பாணம்

# மலையகத்தின் ஏழ்மையில் எமது பங்கு

செழுமையும், கொழுமையும் நிறைந்தது. மலையகப்பணி வாழ்வானது. 55 வருடங்களைக் கடந்தாலும் காலத்திற்கு ஏற்ப அதன் வடிவங்களும், செயற்பாடுகளும் மக்கள் மனங்களில் இடம்பிடித்து நிற்பது மகிழ்ச்சிக்குரியதா கும்.



காலநிலையும், கலாசார மும், பேச்சு வழக்கும் ஏற்ற இறக்கமும் எமக்குத் தடை கற்கள் அல்ல. எளிமை யான, கனிவான மலையக மக்களின் மகிழ்வும், விசுவாசமும் நிறைந்த வாழ்வு எம்மை இறைவனுடனும், இயற்கையோ டும் இயல்பாகவே இரண்டறக் கலந்திட தூண்டுகின்றது. ஆன்மீகத்தாகத்துடனும், அறிவுப்பசியுடனும் இருக்கும் இம்மக்களை நாம் காணும் பொழுது எம்மை பகிர்ந்துகொள்ள வேண்டும் எனும் ஆவல் ஊற்றெடுக்கின்றது.

இவற்றின் மத்தியில் இவர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளை கவலையுடன் நோக்குகின்றோம். 443 வருட காலனித்துவ அடிமை வாழ்வு ஏனைய இடங்களை தவிர மலையகத்தில் மட்டும் பல்வேறு வடிவங்களில் வேகமாக அமுலாக்கப்பட்டுக் கொண்டு வரப்படுகிறது. பத்திரிகையின் பிரச்சாரமோ அமோகம். "ஊரோச்சம் வீடு பட்டினி" நிலம் கிடைக்கிறது, வீடுகள் எழும்புகின்றன, வேலைக்கு சம்பளம் உண்டு, இலவசங்களும் பற்பல, குடிநீர், மருத்துவம், இறப்பு, பிறப்பு என்று சிலவற்றைப் பார்க்கலாம். "யானைப் பசிக்கு சோளப்பொரி எம்மாத்திரம்" எல்லாம் கண்துடைப்பு.

தோட்டத்தொழிலில் தொடர்ந்திருப்பவர்களுக்கு மட்டும் நிலமுண்டு. அதுவும் 7 பேர்ச். ஆனால் வாங்கவோ விற்கவோ முடியாது. கம்பனியின் உரித்து, தக்கவைக்கும் அளவு நாட் சம்பளம், காலநிலை பொய்க்குமானால், நோய் நொடி வந்து விட்டால் அதுவும் இல்லை. அண்மையில் எம் சென் கிளயார் தோட்டத்தில் அடுத்தடுத்து நடுத்தர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதினர் நால்வர் இறந்தனர். காரணம் தடை செய்யப்பட்ட மருந்து புல்லுக்கு அடிக்கப்பட்டது. இங்கே பாடல் மாறுகிறது. 'புல்லுக்கு அடித்த மருந்து வாய்க்கால் வழியோடி ஆற்றுக்கும் ஆங்கே பொசிந்து குடிநீராகிறது'.

அந்தோ பரிதாபம்! எம்மை மரணம் வரை அடையாளப்படுத்தும் ஒரே ஒரு உரிமைச் சொத்து எம் அருமைத்தாய் மொழி-தமிழ்மொழி. அதற்கு நேர்ந்த கதிதான் என்ன? வருடக்கணக்கில் இயங்கும் சென்.கிளயார் தேயிலை விற்பனை நிலையத்தில் தேயிலைப் பொதியின் மேலுறையில் தமிழ்மொழிக்கு ஒரு மூலை தானும் கிடைக்கவில்லை. 100 வீதம் முற்று முழுதாக தேயிலைத்தோட்டத்தில் உழைப்பவர் நாம். விற்பனை பொருளாக்குவது எமது கரங்கள்; வெயில், மலை, பனி நோக்காது, அட்டை, குளவி, சிறுத்தை, பன்றிகளுடன் போராடி இறந்தாலும் இறவாமல் இயங்கும் எம்மவர்க்கு எதிலும் ஒரு சிறு இடங்கூட இல்லை. முகவரியற்ற எம் உணர்வை யாரறிவார் என்ற ஏக்கம் மக்கள் மனதில்.

எம் கத்தோலிக்க திருச்சபை அன்று, ஒவ்வொரு தோட்டத்திலும் கல்விக்கூடங்களை அமைத்தது. கல்வி மேலோங்கத் தொடங்கியது. ஆனால் கல்விக்கூடங்கள் பறிபோனதுடன் கல்வியும் பறிபோனது. கல்வியிலும் தேக்க நிலையாயிற்று.

வைத்தியசாலை வசதியும் வீழ்ச்சி நிலையில் தான் வைத்தியர்களுக்குரிய சம்பளத்தை மேல் நாடு அனுப்பிக்கொண்டே இருக்கும், மக்கள் தான் இடத்துக்கு இடம் அலைய வேண்டும். ஆனால் அரசுக்கு கவலையும் இல்லை நட்டமுமில்லை.

ஐரோப்பியர் அமைத்தளித்த லயன்களில் இருந்த சுகாதார வசதி நிர்வாக மாற்றத்தினால் கவனிப்பாரற்ற நிலையில், நோய்கள் அதிகரிக்கிறது. ஏனைய இலவச வசதிகளும் இவ்வாறே மறைந்து விடுகின்றன.

யாரிடம் செல்வது! எடின் பரோகோ மகன் வந்தார். நன்றாகப் பராமரிக்கப்பட்ட நானுஓயாத்தோட்டம் அழைத்துச் செல்லப்பட்டார். அழகிய சிங்களக்கலாசார உடையில் கொழுந்து பறிப்பவரைக்கண்டார். மகிழ்ந்தார். தாம் கையளித்தவை மிகவும் நல்ல நிலையில் உள்ளன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தோடு திரும்பி விட்டார். அரசின் பாதுகாப்பில் வந்து செல்பவர் யாவரும் இத்தகைய நிலைகளை அனுபவித்துச் செல்வது சாதாரண நிலை.

'தாய்ப்பாலின் மகிமையும் தாய்மாரின் முதன்மையான கடமையும்'' என்று உரத்துப்பேசினார் பா. உ பலர். ஆனால் ஏதாவது வழிவகுத்தனரா? நாள் முழுவதும் தோட்டத்தில் உழலும் போசாக்கு அற்றதாய்மாருக்கு பால் ஏது? பாலூட்ட அவகாசம் ஏது?.



ஒவ்வொரு தோட்டத்திற்கும் 50 வீடு வீதம் வீடமைக்க கேட்ட அனுமதி 25 வீடு வீதம் என்றாகிய திட்டத்துடன் செயற்பட்டார் பா.உ.சந்திரசேகரன். 3500 வீடுகள் எழுந்தன. மலைய கத்தை முன்னேற்ற முற்பட்டவரை விட்டு வைப்பார்களா? சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம். மூன்று இலட்சத்தவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட வேண்டும் என கைச்சாத்திடப்பட்டது அநியாயத்திலும் அநியாயம்.

புகையிரதத்தில் ஆடு, மாடுகள் போல் அடைக்கப்பட்ட காட்சியை தலவாக்கலை நிலையத்தில் கண்டகாட்சி இன்றுமே பசுமையாயுள்ளன. 150 வருடமாக நாட்டுக்காக மாடாய் உழைத்து ஓடாய்த்தேய்ந்து போன மக்களை நாடு கடத்தும் ஈனச்செயலை உலகம் அறிய வந்ததும் திட்டம் தடையாகியது. சென்றவர் சென்றுவிட ஏனையவர் நின்று விட்டனர்.

மக்களின் முறையீடுகள் அரசுக்கும் கம்பனிக்கும் காங்கிரசுக்குமாக மாறிமாறிப் பயணம் செய்து கொண்டே இருந்தது. இந்த நிலையைக் கண்டு பா.ம.உ சந்திரசேகரன் உட்பட சமூகப்பற்றாளர் சிலர் சங்கத்திலிருந்து வெளியேறினார். "மலையக மக்கள் முன்னணி" என்ற கட்சியை உருவாக்கினர்.குரல் கொடுக்கத்தொடங்கினர்.

ஜனாதிபதி பிரேமதாஸ ஒரு இலட்சம் வீட்டைக் கட்டித்தர முன் வந்தனர். ஆனால் ஒரு வீடமைக்க 50 தேயிலைச்செடி பலியாகனும் எனப் புள்ளிவிபரம் காட்டித் தடுத்த எம்மவரின் வித்துவ புலமைதான் ஒரு இலட்சம் வீட்டின் முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போல அரங்கேறும் நாடகங்கள் பற்பல. ஆனால் "ஏழையின் கண்ணீர் கூரியவாளை ஒக்கும்" என்றவர் ஒருவர். "இனித் தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்." என்று அடிக்கடி சொல்லி தந்தை செல்வாவின் கூற்றை நினைவுப்படுத்தினார். இவை எம் கவலைகளை அதிகரிக்கின்றன.

பரஸ்பரம் கைகூப்பித் கடவுளுக்கு தோத்திரம் கூறி ஆசிர் வழங்கும் மக்களின் விசுவாசமும் பண்பாடும் எமது பணிக்கு உற்சாகமூட்டுகிறது. தற்போது தலைத்தூக்கும் நவநாகரீகம் வேலை செய்யும் வெளியிடங்களில் இருந்து வரும் வேண்டாத நடவடிக்கைகள் ஒவ்வாத பழக்கவழக்கங்கள் தொழில்நுட்ப வளர்ச்சி, போதை பொருட்பாவனை போன்றவை நல்லனவற்றை காடேற வைத்தால் ஆச்சிரியமேயில்லை.

இத்தகைய உண்மைகள் எமது சபை வாழ்வின் 200வது வருட நிறைவு எமது விழிப்புணர்வை அதிகரிக்கின்றன. இறைத்துணை நாடியவராக பணியைப் பன்முகப் படுத்த முனைகின்றோம். கல்வி, மறைக்கல்வி, பாலர் பாடசாலை, ஆங்கில வகுப்பு, மெல்லக்கற் போர் செயற்றிட்டம், பங்குப்பணிக் குழுவின் உதவியுடன் தோட்டங் களில் இளைஞர் உருவாக்கம், தியானப்பயிற்சி, இல்லத்தரிசிப்பு போன்ற பணிகளில் ஈடுபடு கின்றோம். பொதுநிலை அங்கத்த வரும் எம்முடன் இணைந்து ஆர்வமுடன் செயற்படுகின்றனர். இறைவனின் நம்பிக்கையின் ஆசீருடன் முன்னேற முயல்கின்றோம்.



தலவாக்கலைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My experience in kandy
# "The Lord has done great things for me."

Iam happy to share my experience of the Transitional Leadership Programme. It was held on 23rd July to 23rd September at charity brother's house in Kandy.We were nine from different Congregations. It was organized by C.M.R.S. Various topics wereconducted by different resource persons the power of now, counseling, spiritual direction, psychology, pastoral care, Religious life, Ecological concern, Yoga, and Zumbadance were included.

Through this programme I gained many experiences and benefits.It was a grace filled and precious time for me. Iam happy to express my gratitude to my Provincial Sr. Charista Mariathas and her councilors.

From all the inputs, group work, counseling practice, liturgy, and sharing helped me to experience the loving presence of God and made me to think positively. Some of the events challenged me to be aware of myself. I feel it was a renewal for my life. Even though we were inter-Congregational group, I was able to respect and accept each one's uniqueness and I experienced the oneness .Now I am convinced to be connected with myself, Divine, others and whole of Cosmos. I feel it is very essential to keep on moving towards and experience this renewal in my day today life.As I am keeping touched with nature I experienced it in my life.



A gentle grass breaks the ground
A little bird measure the sky
A tinny fish goes around the sea
A little star lightning from the sky
A small flower gives its beauty
A drop of water gives life
A spark of fire destroys the mighty wood
A tender baby smiles lovingly
Why can't I?.......


**Sr.Mariaseeli Mariathas**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் கீதம் இசைப்போம்

பிரான்சிய புரட்சிதனில்
பிறப்பெடுத்த எம் சபை
இற்றைக்கு இருநூறு ஆண்டின்
நிறைவின் மகிழ்வில் ......



நன்றிப் பண் பாடும் வருடமதில்
நல்ல பிதா கண்ட கனவு
நனவாகி நானிலம் கண்டதுவே நற்பலன்
நன்றி இறைவா
உம் வழிகாட்டலுக்காய்.

இனத்தின் புரட்சியில்
இலங்கை முப்பது வருடங்கள் மூழ்கியதே - இன்று
யுத்தத்தின் சத்தம் ஓய்ந்து விட்டது
நித்தம் கேட்குதே மனிதத்தின் அவலம்.

சற்று தரித்து நின்று அவலம் கேட்டிடுவீர்
சமாதானம் தந்து
சரித்திரம் படைத்தோம் என்று
சாதித்த திருப்தியில் அரசியல் வாதிகள்.

விடியலுக்காய் குரல் கொடுத்தவர்கள்
விட்டிலாய் தடுப்பு முகாம்களிலும்
சிறைகளிலும்
உறவுகளைத் தொலைத்தவர்கள்
ஊர்வலமாய் வீதிகளில்......




எம்மவர் அவலம் கண்டு
தினம் தினம் அழும் இளையோரும் உண்டு
முகநூலிலும் வட்சப்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசமாய் உலாவந்து
விமர்சனம் புரியும் நம்மவரும் உண்டு
உண்மைகள் புதைக்கப்பட்டு
உணர்வுகள் அத்திவாரமாக்கப்பட்டு
அநீதிகள் சுவர்களாகி
அக்கிரமங்கள் மாளிகையாகி
அதனுள்ளே குடிகொண்டு
வாழ்வை நடத்தும் மனிதம்.



விழித்தெழு! வீதிக்கு இறங்கி வா!!
விளக்கினுள் விழுந்த
விட்டிலாய் துடிக்கும்
எம்மவர் அவலம் பார்த்து
தூக்கிலிட துணிந்திடு
வாழும் உறவுகளே
கண்களை இறுக மூடி
இருகரம் கூப்பி

பிராத்தனை செய்வோமா?
எம்மையெல்லாம் படைத்தவரிடம் - முறையிட்டு
விடுதலை கிடைத்ததும்
விடியலின் கீதம் இசைப்போம்.

அருட்சகோதரி மெரினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Makers of Peace and Reconciliation

My eyes fixed on a poster while I was travelling by bus through Kilinochchi. It goes like this "Thanks for protecting the life of our God of Justice". Many people gathered in Kilinochchi town for the tribute to the police sergeant who threw away his life on 22nd in order to save the life of high court judge Manikavasagam Ilancheliyan. The Tamil people remembered the body guard police sergeant Sarath Hermaratna in every corner of North with heart full of gratitude. The man who is called "God of Justice" did justice by his words and deeds. Yes. He felt the loss of the head of the family as well as the loss of his bodyguard. Whereever he worked the same body guard was with him for more than 15 years. The loss is expressed in tears and in his action. **High court judge wept and bowed down before sergeant Hermachendra's family.** He promised to bring up his body guard's children as his own. This incident is a valued witnessing action and it revealed that the peace and reconciliation is lived among us and still alive. This incident captured the attraction of people world wide through Media.



The root cause can be anything behind this incident but the truth is that the bodyguard who is from South gave his life for the judge from North and the judge who is from North wept and bowed down for the family from south which is very touching incident. The people North expressed their gratitude for the man who saved the life of their "God of Justice". Don't I have the right to do justice? Why are you envious when I am kind? Mt.20:15. The parable of hiring workers to vineyard express that God does justice. Let us understand that understanding, love, and gratitude are very essential for building peace and reconciliation. The high court judge and his justice is a sign board for all of us to walk towards



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

peace and reconciliation. This is a big incident which invites us to start from least matters. The losses take different forms in our life. We grieved and we are still grieving on the roadsides of North in the name of hunger strike rotationally. The younger generation asks the parents who are sitting on the roads for more than five months to withdraw from this strike thinking that the loss is loss. But the parents who gave birth to the life, who brought up them in spit of many trials and difficulties, who saved them from the bomb blast and who handed over in the hand of the Army are feeling very hard and uneasy to leave this search of their loved ones.




We religious in our visits, during our programmes and meetings try our best to help them to understand and accept the reality in order to build peace and reconciliation. Let us speak about this with our associates, school students, and children and with the Youth wherever we meet. This incident is a call for all of us to improve our understanding the feelings of the one who lost. Let us help them to overcome from their losses little by little. We join our hands to dare to bring peace and reconciliation first within our selves and then in our ministries. We believe that we are care takers, we are co creators and we are makers of peace and reconciliation. Hopefully we can reach the goal of living peace and reconciliation in our Country.

**Sr. Theophane Croos**
**Vavuniya**


8331(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையின் ஆன்மீகமும் அனுபவங்களும்

கிறிஸ்தவ வாழ்வின் உயிர் நாடியாக, உயிர் மூச்சாக விளங்குவது அன்பு என்று சொன்னால் மிகையாகாது. கடவுள் மட்டில் அன்பும், பிறர் மட்டில் சகோதரத்துவ அன்பும் எம்மில் இளையோட வேண்டும் என்பது இயேசுவின் முதன்மையான கட்டளையும் மலைப் பொழிவும் எமக்கு தெளிவுப்படுத்திக் காட்டுகின்றன. எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ஒவ்வொருவரும் பிறரன்பு பரிவிரக்கம் என்னும் பாலைவனப் பசுங் சோலையைக் கண்டடைய வேண்டும். கடவுள் எம்மிடம் எதிர்பார்க்கிற பரிவிரக்கம் கருத்தியலில் மட்டுமல்ல, அது எம்மிடையே செயல் வடிவம் பெற வேண்டும்.




இயேசுவின் வாழ்வின் பெரும் பகுதி ஆலய வழிபாட்டில் மட்டும் செலவிடப்படவில்லை. மக்களைத் தேடிச் சென்றார் நோய்களினால் பாதிக்கப்பட்டோர்களுக்கும், துன்பங்களில் சிக்குண்டு வருந்தியவர்களுக்கும், அறியாமையில் உழல்வோர்களுக்கும் ஆறுதல் வழங்கி வந்தார். இவற்றிற்கான ஆன்மீக சக்தியைப் பெறுவதற்காக காலை மாலை இறைதந்தையிடன் வேண்டுதல் செய்து வந்தார். இதுவே திருச்சபையின் அத்தியாவசிய பணியாக விளங்க வேண்டுமென்பதை நாம் இப்போது படிப்படியாக உணர்ந்துள்ளோம்.

திருக்குடும்ப சபையின் பொது நிலை அங்கத்தவர்களாக இணைந்து அர்ப்பணம் செய்து கொண்டபின் பல பயிற்சிகள் பெற்று அன்பியங்களின் நடைமுறையில் இறைவார்த்தையை வாசித்து ஆழமான வகையில் இறைவார்த்தை விழுமியங்களை பொருள் உணர்ந்து ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்வதிலும் தெளிவு படுத்துவதிலும் ஆற்றல் மிகு ஞானத்தையும் பெற்று வருகிறோம்.

பொது நிலையினராகிய நாம் பொதுக் குருத்துவத்தின் மகத்துவத்தை உய்த்துணர்வதோடு பங்குகளில் வாழும் பொது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினரிடையே சிறு சிறு சமூகமாக ஒன்றினைத்து இறைவார்த்தையை வாசித்து ஞானத்துடன் பகிர்த்து பிறரன்புப் பணிகளாக நோயுற்றோரைச் சந்தித்தும், வறுமையில் வாடுவோர்க்கு இயன்றளவு உதவி செய்வதிலும் மனித மாண்புகளை மதித்து தேவையில் இருப்போரை இனங்கண்டு அவர்களைத் திடப்படுத்தி ஆறுதல் கூறுகின்றோம். சமூகத்தில் ஒதுக்கப்பட்டு வாழ்வோர் யாராக இருப்பினும் அவர்களின் நல்வாழ்வுக்காக, உண்மைக்கு குரல் கொடுக்கவும் பக்குவ நிலைகளைப் படிப்படியாகப் பெற்று சாட்சியமுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கான அனுபவங்களை பெற்று வருகிறோம்.

நாம் வாழும் இன்றைய உலகில் நிலவுகின்ற இருள் "அறியாமை". அறியாமையை அகற்றவேண்டிய நல் வழிகாட்டல்களும், நல்ல மனச்சான்றை உருவாக்கக் கூடிய அறிவுறுத்தல்களும் இன்று அதிகமான வகையில் தேவைப்படுகிறது. இன்றைய சமகால சூழமைவில் எத்தனை உள்ளங்கள் நன்மை எது? தீமை எது? என புரியாமல் தடுமாறி திசைமாறி அலைகின்றனர் மனம் விரும்பியதெல்லாம் செய்து வாழும் பொழுது மனச்சாட்சி மழுங்கி மந்தநிலை அடைகிறது. இவற்றைச் சீர் செய்து வாழ்வதற்கான ஆற்றுப்படுத்தல்கள் தேவைப்படுகிறது.

நாம் இறைவன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குறித்து போதியளவு விளக்கம் இல்லை. இதனால் ஆன்மீகத்திற்கு ஈடாக விசுவாசத்தை பக்தியோடு இணைத்துக் கொள்கிறோம்.

ஆண்டவர் பற்றிய அறிவிலும் அனுபவத்திலும் வளரும் போது தான் விசுவாசம் தெளிவு பெறுகிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உண்மைகள் பற்றிய தெளிவும் அவசியமாகிறது. இவை பற்றிய தேடலும் புரிதலுமே விசுவாச வாழ்வுக்கு வெளிச்சத்ததைக் கொடுகிறது. இருள் நீங்க திருவிவிலியத்தை வாசித்தும் விசுவாசப் போதனைகளுக்கு செவிமடுத்தும், உண்மையை நோக்கி பயணம் செய்யும் நற்செய்தித் தூதுவர்களாக நாம் வாழுகின்ற சூழமைவில் வாழ, வளர புனிதம் சிந்தும் மனிதங்களாக முயற்சிப்போமாக. சிந்தனைக்கு சுகமான சுயநலமான கூடுகளில் இருந்து வெளியேறி சமூகத்தில் துன்புறும் விளிம்பு மட்டத்தில் உள்ளோரைக் தேடி சந்திப்போம் கைகொடுப்போம்.

ம. சூசைமுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grace filled year

2016- 2017 has been a grace pouring Year for me, when I look back at my past 25 years of religious life. It is impossible to count the blessings of my past years. Let my heartfelt gratitude reach the Holy Presence of my Lord.

This was a strong impulse in my life that I should go for a deeper renewal and it would be better if it takes place outside my country and it was Philippines, another blessing that the almighty Father paved the way for me.

Everything was new: places, culture, food, people even clothing a scare crept within me for a moment but the next minute I dared to move, started my journey, but not knowing that I am heading for a different journey. The welcoming spirit of our Sisters removed, if any fears were in me, I got use easily to the environment.

Within one or two days I was at the East Asian Pastoral Institute to follow a course on Pastoral Renewal and Updating for Leadership and Mission from 2$^{nd}$ August to 4$^{th}$ December. My real journey, the interior one, started towards, to which my attention was directed from time to time. The International group which I belonged to, enriched my experience with its beautiful, different cultures.

In between the 8 days Retreat of Ignesian spirituality and another3 days Reflection, not only enhanced my spiritual life but also healed my inner wounds. This made my interior life feasible. I experienced that these golden days were God given graceful gift in my Life.

The aspect of conversion makes space for the inner life to expand in every direction. Each module motivated me to move step by step forward and gradually to advance which also, provided me interior freedom and energized me to progress in my inner journey. The Jesuit priest directed and guided me in this respect and for a new and continual search.

Another 3 months, journey started through the Clinical Pastoral Education, helped me to put into practice what I have learnt theoretically. This practical learning held at the Kidney and Transplant Institute in Manila, which was a hard journey to go through, but the God who journeys with


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

me was my energy. So gradually I was able to integrate myself into it. This also helped me to interiorize my inner sacred journey meaningfully, spiritually and in ministry. No need to emphasize that of my ministry life too would be enhanced.

The Clinical Pastoral Education course was a big support to listen to myself deeply and I was aware of myself more than ever. I discovered some areas within me which were not touched in my past years. This made it feasible when visiting the sick in the hospital and listen to them whole heartedly and shared their sad and happy events in their life. This opportunity made me to understand a little bit clearly the beautiful culture of the Philippines and to become a part of their life struggle.

This experiential journey carried me further to deepen in the communities of our Sisters; Rizal, Bulan, Sauyo and Matatag to live their lives and to join them in their ministries. The hidden lives of our Sisters reminded our Founder's exhortation "compared with the flowers of the desert, with the flowers that grow at the edge of an abyss or at the foot of the ruins and tombs" Especially the life of the Lay Associates and their enthusiasm challenged me and I was happy to see our Charism is being alive fully in their midst.

In general, I could say that the experience I gained in Philippines energizes me to go further into my wellspring. There I shall be strengthened to renew my spirit from time to time to live my inner journey here and now. which will be my gratitude to God who blessed me with his special Gift. I take this opportunity to thank Sr. Christa our provincial and her councilors for having given me this opportunity to renew my life during this peried of one year.

**Sr. Jacintha Anthony.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்க்கையின் மனிதன் இயேசு

## நானாட்டான் ஒன்றுகூடல்

10.05.2017 அன்று காலை 9.00 மணியளவில் நானாட்டான் திருக்குடும்ப இல்லதில் நானாட்டான் வலயத்தை சேர்ந்த வங்காலை, அரிப்பு, பெரிய பண்டிவிருச்சான், நானாட்டான் பொதுநிலையினர் ஒன்று சேர்ந்து 51 அங்கத்தவர்களும் தேசிய தலைவி, ஆசிய தலைவி ஒவ்வொரு குழுக்களுக்கும் பொறுப்பான அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு திருக்குடும்ப பொதுநிலையினருக்கான திட்டமிடலின் படி மூன்று தலைப்புகளில் உரைகள் வழங்கினார்கள்.

முதலாவது தலைப்பாக திருக்குடும்ப வரலாறு என்ற தலைப்பில் சகோதரி பெனிக்னஸ் உரை வழங்கினார். சிறப்பாக எமது சபையின் வரலாற்றை நாம் இன்னும் ஆழமாக கற்று கொண்டோம். அருங்கொடை ஆன்மீகம் என்ற தலைப்பில் அருட்சகோதரி நெவிஸ் இரண்டாவது உரையை வழங்கினார். எமது ஆன்மீகத்தை நாம் விரிவாக அறிந்து கொண்டதுடன் திருக்குடும்பத்தில் ஆழமான பற்றும் விசுவாசமும் அதிகரித்திருப்பதை நாம் உணருகின்றோம்.

மூன்றாவது உரையை பொது உருவாக்கம் என்ற தலைப்பில் ஆசியத்தலைவி திருமதி றெஜினா இராமலிங்கம் வழங்கினார். திருக்குடும்ப வாழ்வை ஒரே அருங்கொடை ஆன்மீகத்தில் வாழ்தல் குடும்பத்தில் ஒருமித்த தன்மையோடு வாழ்வதற்கு பொது உருவாக்கம் தேவை என்பதை அறிந்து கொண்டோம். அதை தொடர்ந்து மதிய விருந்துடன் இனிதே நிறைவுற்றது.

இவ் ஒன்று கூடல் மூலம் நாம் பெற்றுக் கொண்ட நன்மைகள் அதிகம் திருக்குடும்ப வரலாற்றை 200 ஆண்டு நகர்வை நாங்கள் அறியக்கூடியதாக இருந்ததுடன் அனைத்து குழுக்களுடனும் ஒன்று கூடியதால் அவர்களுக்கும் எமக்கும் இருந்த உறவு ஆழப்பட்டது. மற்றும் இந்த ஒன்றுகூடலை ஆயத்தம் செய்த எம் அருட்சகோதரிகளுக்கும், நல்ல முறையில் இடம்பெற இட வசதிகளை செய்து தந்த எம் நானாட்டான் அருட்சகோதரிகளுக்கும் எம் நன்றிகள்.

200 வது ஆண்டு நிறைவை சிறப்பிக்க இருக்கும் எமக்கு இயற்கையின் மனிதன் இயேசு, யார் என்பதையும், அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை வாழ அவரைப் பின் செல்ல அழைப்புப் பெற்ற எமது வாழ்வு எத்தகையதாக அமைந்திருக்கின்றதென்பதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இயேசு இயற்க்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தார். இறையாட்சி என்பதை இயேசு மூன்று வழிகளில் உள்வாங்கியிருக்கின்றார்.அவை

1. இயற்க்கை வழியாக
2. வரலாறு வழியாக
3. உடன்படிக்கை வழியாக

(யோவா. 7:16 ) நான் கொடுக்கும் போதனை என்னுடையதல்ல அது என்னை அனுப்பியவருடையது என்று கூறித் தந்தையைக் காண்பிக்கின்றார். (மத் 5:45) இறைவனுடைய நீதி எல்லோர் மீதும் இருக்கின்றதென்பதையும் (மத் 6: 25– 36) (மத் 10:29 – 30) இறைவனுடைய பராமரிப்பையும் எடுத்து காட்டுகின்றார். (மத் 12:33) மரமும் கனியும் என்ற பகுதியை இயற்கையோடு தொட்டுக்காட்டுகின்றார். இயேசு இயற்கையோடு ஒன்றித்திருக்கும் மனிதனாக விவிலியத்தில் பல இடங்களில் காணலாம்.

(தி.பா 118) உலகில் உள்ள எல்லாமே இயற்கை என்று சங்கீத ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். (தி.பா 19:1-6) இயற்கை பேசிக்கொண்டிருக்கிறது. பரப்புகின்றது, இயற்கையோடு நமது நற்செய்திப் பணி ஒன்றித்திருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. விமர்சிக்கும் தன்மையோடு நாம் தியாணிக்க வேண்டும். இயற்கை எமக்கு காட்டுபவை எவை என்பதை சிறிது உற்று நோக்குவோம். அவை ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள தொடர்பு ஒன்றுக்கொன்று கொடுக்கும் பதில், ஒன்றை ஒன்று ஏற்கும் தன்மை, ஒன்றை ஒன்று ஏற்றுக் கொள்வதால் வாழ்வு கொடுப்பது, இருக்கின்ற இடத்தில் செழிப்புடன் அர்ப்பணிப்போடு வாழ்வது மற்றவரை செழிப்புடன் வாழச் செய்கின்றது. நாம் இருக்கும் இடத்தில் எங்களுக்குள் நெருக்கமான உறவு இருக்கின்றதா? ஒருவரை ஒருவர் ஏற்று தாக்கி மகிழ்வுடன் வாழ்கின்றோமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையோடு ஒன்றித்து இயற்கையின் தன்மைகளை உணர்ந்து வாழ்கின்றோமா?

இந்த இயற்கை என்றுமே வர்ழ்வு உண்டு என்று காட்டுகிறது. முதிர்ந்த இலைகள் வாடிவிழ மீண்டும் துளிர் விட்டுச் செழிப்புடன் தளிர்க்க ஆரம்பிக்கின்றது. ஆனால் நாம் எம்முடைய வாழ்வைப் பார்க்கும் போது சிறிய கஸ்டங்கள், துன்பங்கள் வரும்போது சோர்ந்து துவண்டு வாழ்வே முடிந்து விட்டது இனிமேல் வாழ முடியுமா என்று சலிப்படைந்து போகிறோம் எனவே வாழ்வைத் தெரிய வேண்டும்.

தொடக்கநூல் (6:5-8,) (13- 22,) (8:6-12,) ( 15- 18) நோவாவுக்கு அருள் பார்வை கிடைக்கிறது. வாழ்வு அழிக்கப்படவில்லை வாழ்வு உண்டு என்று புறா கொண்டு வந்த ஒலிவமிலை காட்டுகிறது. ஊசலாடிக் கொண்டிருக்கிற வாழ்வில் உயிராற்றல் மிக்க ஒலிவமிலை. இந்த உயிராற்றல் என்னில் இருக்கிறதா? இந்த உயிராற்றலை நான் மற்றவர்களுக்கு கொடுக்கின்றேனா? கொடுக்க முடியுமா? (தொடக்க 9:10) மண்ணுலகிலுள்ள எல்லா உயிர்களோடும் எனது உடன்படிக்கை நிலை நாட்டுகின்றோன் என்று நோவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை Cosmic Covenant என்று அழைக்கின்றோம். (தொடக்க நூல் 17:1-14, 26:23-24, 28:11-13) இறைவன் ஆபிரகாமை நோக்கி அஞ்சாதே நான் உன்னோடு இருப்பேன். உனக்கு ஆசி வழங்குவேன் என்று கூறி நிலம், இனம், நாடு அனைத்தையும் வழங்கி அவருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை,Earth Oriented Covenant என அழைக்கின்றோம். (வி.ப 24: 3- 8) இறைவன் மோசேயின் ஊடாக இஸ்ரேயல் மக்களுடன் செய்த உடன்படிக்கை இது வரலற்று உடன் படிக்கை, மக்கள் உருவாக்கம், தேசிய உடன்படிக்கை(National Covenant ) (தி.பா 8: 3- 4ல்) கூறியபடி இயற்கை இத்தகைய ஆற்றலோடு இருக்கின்றது உலகின் கடையெல்லைவரை நற்செய்தியை பரப்புகின்றது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவொரு கடவுளின் அன்பை பிரதிபலிக்க எமது நிறுவுனர் திருக்குடும்பத்தின் முன் மாதாரிகையான வாழ்வை வாழ சபையை நிறுவினார். திருக்குடும்பம் இயற்கையோடும் மக்களோடும் இணைந்து இறைவனின் திட்டத்தை நிறைவேற்றி வாழ்ந்தார்கள். நிறுவுனரும் இயற்கைறோடும், திருச்சபையோடும் இணைந்து வாழ்ந்தார் என்பதை அவருடைய வாழ்வில் இருந்து காண முடிகிறது. அவர் ஏகாந்த சபை சகோதரிகளை ஒரு சில வகைப் பூக்களுக்கும், ஏழைப் பயணிகளாக பணிபுரியும் சகோதரிகளை வனாந்தரத்தில் வளரும் மலருக்கும், கல்லறை அடிவாரத்தில் வளரும் மலருக்கும் ஒப்பிடுகிறார். உலகெங்கும் எமது சபை பரவ வேண்டும் என்பது தான் அவரது கனவு. அவர் தனது கனவை பல கிளைகள் விட்டு பரந்து வளரும் மரத்தில் பல இனப் பறவைகள் வந்து தங்கி, இறைவன் மாத்திரம், இறைவனுக்கு மகிமை எனும் கீதம் ஒரே குரலாய் ஒலிக்கும். என்ற கனவு; இன்று இருநூறாவது ஆண்டு நிறைவில் உலகின் பல நாடுகளிலும் சபை வளர்ந்து பலன் கொடுக்கின்றது. இன்னும் அவரது இனிய மொழி "முன்னேறிச் செல்லுங்கள் உங்கள் ஓட்டத்தை தடை செய்யக் கூடியது ஒன்றுமில்லை" இன்று எமது பணி இயற்கையோடும், திருச்சபையோடும், மக்களோம் இணைந்திருக்கின்றதா? திருச்சபையில் நாம் எங்கே நிற்கின்றோம். மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழுகின்றோமா? வாழ முயற்சிக்கின்றோமா? இறையாட்சி என்பது பாதிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட இயற்க்கையைப் புதுப்பித்தல், உயிரோட்டம் அளித்தல் என்பதாகும். இருநூறாவது ஆண்டு நிறைவில் நிறுவுனருடைய கனவு நிறைவேறி வருவதைக்கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். நிறுவுனரும் விண்ணகத்திலிருந்து நிறைவைக் கண்டு மகிழ்ச்சி அடைவார் என்பதில் ஐயமில்லை.

*அருட்சகோதாரி மேரி றுவீனா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவைகள் சுமக்க சீமோன்களே வாருங்கள் -



ஹலோ ஹலோ யார் பேசுறீங்க:-யோகா

என்ன என் குரல் உங்களுக்குக் கேக்கல்லையா?

சரியா விளங்குதில்லயா, இல்ல கேக்க நேரமே இல்லையா? விளங்கேல்லையா?

எங்கேயோ கேட்டது போல இருக்கு, ஆனா பிடிபடுதில்லை யார் எண்டு சொல்லுமன்

எல்லாரும் என்னை மறந்திட்டியள் அதுதான் என் குரல் பிடிபடு தில்லைப்போல.........


தாரு,விஜியா, சுசிலாவா, வித்தியாவா? தாரு எண்டுசொல்லுமன்

நான் வித்தியா தான் கதைக்கிறன்.......

அடகடவுளே கனவா எல்லோ இருக்கு.

ஏன் கடவுளைச் சொல்லுறியள் எத்தனை சிலுவையை நாங்கள் சுமத்துறம் என்று எண்ணிப் பாருங்க சுமத்திறவயபார்த்து இருப்பவரும் பங்காளிகள் தானே. அதுதான் அன்றுசொன்னார் இயேசு "எனக்காக அளாதீங்க, உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று.

என்னில அதிகம் அக்கறை கொண்ட அப்பாவிகள் பலரும் பல கஸ்டத்தை அனுபவிச்சாங்க, ஆனா என்னைத் துலைக்க முன் வந்தவங்கள் நீங்க இப்ப அறிவியள் தானே, இது கூட முடிந்த முடிவில்ல இன்னும் என்னைப் போல எத்தனை வித்தியாக்களின்ர மௌன முனங்கல் யாருக்குமே கேட்குதில்ல கேட்டாலும் அத மூடி மறைச்சு குற்றவாழிகளை காப்பாத்த தானே எத்தனை பெரியமனுசர் எண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறவயள் பணத்துக்காக இருக்கினம். அவையளுக்குத் தான் இப்ப மாலை மரியாதை கொடுத்து வரவேற்குது எங்கட சனங்கள்.

உண்மையைத் தாங்க முடியாது கொதித்து எழுந்த இளசுகள் எத்தனை விசாரணையில் படியேறி இறங்கினம், எல்லாம் மறந்த சனம் இப்ப TV நாடகம் போலயெல்லோ என்ர கதைய கதைக்கினம் ஒளிய, பணம் பத்தையும் செய்யும் என்று கை நீட்டிவாங்கின பெரிசுகள் தங்கட குடும்பத்திலயும் பெண் பிரசுகள் இருக்குதென்று எண்ணுதுகள் இல்லை அதுதான் வேதனையாய் இருக்கு.

"சின்னஞ் சிறுவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற வார்த்தைகளை தீமைகள் செய்வோரும் எல்லோ எண்ணிப்பார்க்க வேண்டும்.

கன நாளைக்குப் பிறகு உம்மிட குரலைக் கேட்க உண்மையில கவலையா இருக்கு. இரண்டு மூண்டு வருசம் கழிஞ்சாலும் மறக்க முடியுமா? எல்லாருக்கும் வேதனை தான் ஆனா நாங்க என்ன செய்ய முடியும். சேர்ந்தவையள் எல்லாம் பெருச்சாளியளா இருக்குதுகள் அதை நினைக்கத் தான் .......

பெருச்சாளியளுக்கு தான் வெட்கம், மானம், சூடு, சுரணை இல்லையே, இருந்தா இப்பவும் கோட்டுச் சூட்டோட வீடு வாசல்ல வாழுவினமே அவயளோட பிள்ளையள், மனைவிமாரும் என்ன நம்பிக்கையில் வீட்டிலவச்சிருக்கினம்.

அது போக என்னைப் போல பல வித்தியாக்களின்ர நிலையள் தெரியுமோ? சமூகத்தில் குற்ற வாழியளாக்கிப் போட்டு மறைவான முகங்களிலையும் ஒதுக்கமான சமயல் அறைகளிலயும் முடங்கிக் கொண்டு எல்லோ எத்தனையோ வாழுதுகள். அதுகளின்ர முனங்கல் எங்களுக்குக் கேட்குது அவை உங்களுக்குக் கேட்கலையே. அதுதான் கவலையா இருக்கு.

இல்லை அது ஒண்டும் வெளியில் வாறதில்லை. அதை மூடிமறைக்க இங்க கன பெருச்சாளிகள் முகமூடி போட்டு செல்வாக்கு செலுத்திறது மட்டும் காதிலவிழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி சொல்லி நீங்க தப்பிக்கிறதால தான் வீதிக்கு வீதி எண்டு இப்ப வீட்டுக்கு வீடு பல வித்தியாக்களின்ர முனங்கல்கள் ஊரையே கலக்குது தெரியுமோ.

உண்மைகள் மௌனிப்பதாலே தான் கோளைகள் பெருச்சாளிகள் ஒன்று சேர்ந்து நாடகமாடுறாங்க தண்டிக்கப் பட்டவையள் தண்டிக்கிறது தான் காலமாப் போச்சு, இப்ப குற்றவாளிகள் சட்டத்தைக் காட்டி தப்பிக்க வழியாப் போச்சு. எந்தச் சமயமும் உண்மையை உரத்து சொல்லச் சொன்னா அதை மறைக்கிறவர்கள் சமய வாதிகளாகவும், சட்டத்தரணிகளாகவும் இருந்து சமயத்தைப் பேசிப் பயனில்லை

உண்மையில் நீர் சொல்லுறது ஏமாத்திறவங்களுக்கு வெற்றியாப் போச்சு, அவங்களே எங்கள வழிகாட்ட வாறது நாங்க கொடுக்கிற இடம் தான். யேசுவைக் குற்றவாழிக் கூண்டில் நிறுத்தி தண்டித்தவை எல்லாம் இப்படித்தான் இருந்திருப்பாங்க எண்டத உணர்ந்ததோட இல்லாமல், நீதிக்குக் குரல் கொடுக்கிறதுக்கு நாங்க முன் வராட்டி நாங்களும் பாவச் செயலில் பங்காளராகத் தான் பாவத்த, சுமக்கவேணும் எண்றத உணருறம். சிலுவைகளைச் சுமக்க சீமோன்களாகவருவீர்களா?

“எதை விதைப்பியளோ அதையே அறுவடை செய்ய வேண்டிவரும்” வழிபாடுகள் வேறையா, வாழ்க்கை வேறையா வாழுறதில அர்த்தம் இல்லை. என்னைப் போல் துன்புறுத்தப்பட்டு முனங்குகிற பலருடைய துயரைத் துடைக்கிறதுக்கு வெளியில் வருவீர்களா. சற்றுயோசியுங்கள்.

திரு.யோசப்பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# The Nature speaks to us

Dear Human friends! We are unique and different from you!
But .......
We are God's creation
We are rooted ourselves on the soil
We are alive- So
We depend on the five elements
They help us to grow- Why?
To bear fruits in abundance.



Hi!
Human friends!
You and we are brothers and sisters
We are called to live together
Where? In this planet.

Look at the greenery world,
It is a beautiful garden:
Why? We can say:
"It is our community too"
Variety of species and plants
Different size, colors, shapes etc..
But all of us together beautify this world.



On the other hand,
We don't need any separation
We love each other
We help each other
Live a natural life
And make our Mother Earth happy
We are all the children of God.

**Sr. Jasmin Jesunesan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞர்கள்

சபை ஆரம்பித்து இருநூறாவது ஆண்டை முன்னோக்கி "குடும்பமாக வாழ்ந்து, எமது ஐக்கியத்தை கொண்டாடுவோம்" என்னும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நகர்ந்து கொண்டிருக்கும் நாம் யூபிலி ஆண்டை அர்த்தமுள்ளதாக்க எமது சபையினால் "Youth for change" என்ற செயல்த்திட்டம் ஜெயபுரம், மல்லாவி ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்படுவது நாம் அறிந்ததே. அந்த செயல்த்திட்டத்தினை பார்வையிட வந்த அதன் இணைப்பாளர் அருட்சகோதரி வினி பிறீடாவை வரவேற்கும் நிகழ்வில் இடம்பெற்ற இளைஞன் ஒருவனின் பேச்சு.

**பேச்சு** - நாளைய சமூதாயத்தின் தூண்களாக இருப்பவர்கள் இன்றைய இளைஞர்கள் ஒரு நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் தான் இருக்கின்றது. இவர்களை செம்மைப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட சமூதாயத்தை உருவாக்க முடியும்.

குடும்பத்தில் இளைஞர்களுக்கு ஈடுபாட்டை உண்டாகுதல், பள்ளிப்படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடச் செய்தல், சக நண்பர்கள் மற்றும் சகவயதினருடன் இசைவுடன் பழகுதல், வாழும் சமூகத்துடன் சுமூகமாகவும், முழு ஈடுபாட்டுடனும் நடந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்துதல், உட நலம், உள நலம் குறித்து விழிப்புணர்வு ஊட்டுதல்.

முற்றும் சுயகட்டுப்பாடு, பொறுப்பேற்றுச் செயற்படுதல், சரியாக சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல், பிறருடன் இணைந்து செயற்படுதல் போன்ற பண்புகளை இளைஞர்கள் இடத்தில் கொண்டு வருதல் வேண்டும். இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட சமூதாயத்தை உருவாக்க முடியும்.

ஆண்களும், பெண்களும் இன்று சரிநிகர் சமனாக சாதனைகள் பல படைத்து வருகின்றார்கள் ஒரு நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் தான் உள்ளது என்று நீரூபித்துக்காட்டி வருகின்றார்கள். இளைஞர்களின் வளச்சிக்கேற்பதான் ஒரு நாட்டின் வளர்ச்சியும் இருக்கிறது என்று அவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். இதனை ஊடகங்கள் வாயிலாகவும் நாங்கள் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

இத்தகைய வலிமை படைத்த இளைஞர்களை ஒவ்வொரு அரசாங்கமும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த வலியுறுத்தும் விதமாக ஆவணி மாதம் 12ம் திகதி பன்னாட்டு இளைஞர்கள் தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் அறிவிக்கப்பட்டு 1999 முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 15 வயது தொடக்கம் 24 வயதிற்குட்பட்டவர்களை இளைஞர்கள் என ஐக்கிய நாடுகள் நபை வரையறுத்துள்ளது.

இன்றைய இளைஞர்களின் ஆற்றலை அளவிட முடியாது எதையும் புரிந்து கொள்ளும் திறமை மிக்கவர்கள் புதிய புதிய விடயங்களை கற்றுக்கொள்வதிலும் ஆராய்வதிலும் ஈடுபாடு கொண்டவர்கள். விஞ்ஞான கல்வித்துறையில் அதிக ஈடுபாட்டுடன் விளங்கி யதன் காரணமாக தங்களுக்கான கல்வித்துறையை தேர்ந்தெடுத்துக் கொள்வதில் போட்டியாளராக மாறி இருக்கின்றார்கள் கணினி தொழினுட்ப துறையில் தேர்ச்சி பெற்று விட்டதால் எந்தக் கணினி பாகமாக இருந்தகலும் அக்குவேறு ஆணிவேறாக பிரித்து மேயக் கூடிய ஆற்றல் இன்றைய இளைஞர்கள் மத்தியில் வளர்ந்து வருகின்றது.

எதையும் சாதிக்க வேண்டும் சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டும் என்ற துடிப்புணர்வு, அக்கறை இன்றைய இளைஞர்களிடம் மேலோங்கி காணப்படுகின்றது. இன்று எத்தனையோ இளைஞர்கள் எத்தனையோ குறிக்கோள்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

அதேவேளை வேறு சில இளைஞர்கள் தங்களது குறிக்கோள்களை தூக்கி எறிந்து விட்டு, தீய வழிகளிலும் தப்பான எண்ணங்களோடும் தங்களது கனவுலக வாழ்க்கையில் மிதக்கின்றார்கள். அதாவது கொலை, களவு திருட்டு மற்றும் வாழ்வெட்டுச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகமாக இடம் பெறும் நாசகாரிய செயலாகும். இது இன்றைய இளைஞர்களால்தான் ஏற்படுத்தப்படுகின்றது என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதனால் யாழ்ப்பாணம் சீர் கெட்டுப் போயிருக்கின்றது.

இன்று காணப்படும் முக்கிய பிரச்சனைகளில் வேலையில்லாப் பிரச்சினையே உலக நாடுகள் அனைத்திலும் தலைதூக்கி இருக்கின்றது. தாங்கள் கற்ற கல்விக்கேற்ப வேலை வாய்புக் கிடைக்காமை இளைஞர்களை விரத்திக்குள்ளாக்கியுள்ளது. இதனால் இன்று எத்தனையோ இளைஞர்கள் வேலைவாய்ப்புக்கள் கோரி வீதியில் இறங்கி பல நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வன்புணர்வுப் போக்கு இன்றைய சில இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதை பத்திரிகைகள் வாயிலாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.


சிவானந்தம் மலறோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது?

அண்மைக்காலங்களில் கல்வியில் எமக்கு கிடைத்த பின்னடைவு எந்த அளவுக்கு உண்மையோ அந்தளவுக்கு வாழ்வின் சவால்களையும் தோல்வி களையும் எதிர் கொள்வதிலும் நாம் நன்கு பின் தங்கியுள்ளோம் என்பதும் உண்மையே. இங்கு கற்றறிந்த பலரும் கூட தமது வாழ்வில் ஏற்படும் சவால்களை எதிர் கொள்ள முடியாமல் அல்லது தமக்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாமல் தமது உயிரை மாய்த்த சம்பவங்கள் நிறையவே உண்டு. இதற்கான காரணங்கள் அவர்களது கல்வி, பரீட்சையை, அல்லது வேலை வாய்பை மையப்படுத்தியதாக அமைந்தி ருப்பதே கவலைக்குரியது.



### கடிதங்கள்-கற்பிக்கும் வாழ்வியல்

வாழ்வதற்கான கற்றல்களையும், விழிப்புணர்வையும், சுயமதிப்பை யும், தற்துணிவையும், வெற்றி தோல்விகளின் சமநிலைத் தன்மையையும், இயற்கையின் இயல்புநிலையையும் கற்றுக் கொள்ளாமல் விடுதல் ஏட்டுக் கல்வியின் ஸ்திரத் தன்மையை கேள்விக் குறியாக்கி விடுகிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்வான கடிதத்தின் மூலமும், சிறந்த கண்டுபிடிப்பாளராக விளங்கிய தோமஸ் அல்வா எடிசன் அவர்களின் தாயாருக்கு, ஆசிரியரால் எழுதப்பட்ட கடிதமும், அதற்கு அவரது தாயார், நேர் சிந்தனையாக அதை மாற்றியமைத்தமையும் நாம் அறிந்திருக்க வேண்டும். கற்றல், கற்பித்தலின் மேன்மை யையும் நேர்த்தியையும் பெற்றோர் ஆசிரியர்கள் பிள்ளைகள் மீது வைத்துக் கொள்ள வேண்டிய நம்பிக்கை யையும் இதிலிருந்து கற்றுக் கொள்ள முடியும். அடித்தர வர்க்கத்திலிருந்து நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசதலைவராகிய தன்னுடைய கடும் உழைப்பையும், வாழ்வில் தான் கடந்து வந்த பாதைகளின் அனுபவங்களையும், பக்குவத்தையும் தனது மகனும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தனது நோக்கத்தை தனது மகனின் ஆசிரியருக்கு விளக்கி கூறுவதற்கு கடிதம் ஒன்றை வரைந்தார் ஆபிரகாம் லிங்கன்.

கடிதத்தில் இருந்து.......

"அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்களென அவனுக்கு சொல்லி கொடுங்கள். பகைவர்களுக்கு நடுவில் அன்பான, நட்புக் கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்கு தெரிவியுங்கள்". "பொறாமை அவன் மனதை சூழாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது கோழைத்தனம் எனப்புரிய வையுங்கள்". "புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள். "ஏமாறுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது எனவும் அவனுக்கு கற்றுக்கொடுங்கள்". "மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும் கூட சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்". "மென்மையான மனிதர்களிடம் மென்மை யாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு தயார்ப்படுத்துங்கள்'. "அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள்' எனினும் "உண்மை என திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்கவும் தேர்ச்சி கொடுங்கள்". துயரமான வேளையில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில்



தவறில்லை என்றும் அவனுக்கு புரியவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியான நட்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப்புகளுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சி கொடுங்கள்". "அவனை கனிவாக நடத்துங்கள் அதிகம் செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம்".

"சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங் கள். அதே வேளையில் தனது வலி மையை மௌனமாக வெளிப் படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லிக் கொடுங் கள்". இது ஒரு பாரிய பட்டியல் தான் இதில் சாத்தியமான தையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் என் அன்பு மகன். இப்படிக்கு ஆபிரகாம் லிங்கன்.

இதுவே அவர் வரைந்த கடிதம். இதில் நெகிழ்வுப் போக்குடனும் மிக மிக நிதான மாகவும் தனது வாழ்நாளின் வடு நிறைந்த அனுபவத்தின் செதுக் கல்களை குறிப்பிட்டுள்ளார். இன்றைய பெற்றோர்களைப் போல வைத்தியராவதற்கு அல்லது பொறியியலாளராவதற்கு கற்பி யுங்கள் என்பதை விடுத்து நல்ல மனிதனாகவும், சுயமாக தனது பகுத்தறிவாலும், பட்டறிவாலும் இயல்பு வாழ்வை மகிழ்வுடன் வாழக் கற்றுக் கொடுக்கவே அவர் வலியுறுத்தியுள்ளார். இதுவே ஏட்டுக்கல்விக்கு எட்டாதிருக்கும் அனுபவ வாழ்வியல் கல்வியாகும்.

## எடிசன் மூலம் ஓர் எடுத்துக் காட்டு

இன்று பாவனையிலுள்ள பல பொருட்களை கண்டுபித்து மிகச் சிறந்த கண்டுபிடிப்பாளன் என்ற பட்டத்தை வென்றவர் தோமஸ் அல்லா எடிசன். சிறு பராயத்தில் அவரது அளவுகடந்த குறும்புத்தனங்களில் சினம் கொண்ட அவனது ஆசிரியர் மிகுந்த கோபத்தோடு ஒரு கடிதத்தை வரைந்த அவனது கைகளில் கொடுத்து அதை அவனது தாயாரிடம் கொடுக்கும் படி கூறினார். பள்ளியில் இருந்து வீடு வந்த எடிசன் தனது அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என ஆசிரியர் கூறியதாகச் சொல்லி அதை தாயிடம் கொடுத்தார். அந்தத் தாய் கண்ணீருடன் அதை சத்தமாக தன் மகன் கேட்கும் படியாக அதைப் படித்தாள். "உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன்னால் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்கு கற்பிக்கு மளவுக்குத் திறமைமறான ஆசிரியர் கள் இல்லை. ஆதலால் தயவு செய்து நீங்களே உங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனுக்கு கற்பிப்பது நல்லது". பல ஆண்டுகளுக்கு பிறகு எடிசனின் தாய் இறந்து விட்டாள். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராட்சியாளராகவும் கண்டுபிடிப் பாளராகவும் ஆனார். இப்படி இருக்கையில் ஒரு நாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கும்போது அவர் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்த அந்த கடிதம் எதேச்சையாக கண்ணில்பட அதை எடுத்து படித்துப் பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது. "மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம்." இதைப் படித்த எடிசன் அழுதான். தனது நாள் குறிப்பேட்டில் "மூளை வளர்ச்சி குன்றிய எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளன் ஆனான் என்று குறித்து வைத்துக் கொண்டார்.

எம் மீதுள்ள எதிர் மறையான சிந்தனைகளை எப்படி நேர் சிந்தனையாக மாற்றி வெற்றி கொள்வது என்பதற்கும், பிள்ளை களின் மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது என்பதற்கும் இச்சம்பவம் மிகச் சிறந்த உதாரணம். ஆபிரகாம் லிங்கனின் வேண்டுகோளை நிறைவேற்றவல்ல ஆசிரியர்களும் தோமஸ் அல்வா எடிசனின் தாயாரைப்போல் தன் பிள்ளை மீது நம்பிக்கை வைத்து 'உன்னால் முடியும் எனற உந்துதலை கொடுக்கும் பெற்றோரும் அமைந்தால் ஒவ்வொரு மாணவரும், இளை ஞரும் வாழ்வில் உயர் நிலை அடைவர் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

**Sr. Joiline**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Burning Heart

My fertile nothingness I praise you o creator
My hearts beats raises it voices to thank you
You are wonderful in all your deeds
The breath of your spirit new life every day.

My unfinished journey praise you Lord
I am not alone to travel whole cosmic family gives me energy
Thank you for your element of fire that
Sparkle of the love is yours.

I raise innermost self with galaxies and stars to praise you
I bow down with the earth's life to thank you
I joined my thoughts with solar systems to praise you
Your unfolding mystery is evolving.

The song of birds is your music
The fragrant of the flowers perfume
The waves of the sea is your drum set
Each of us is an unfinished symphony.



My heart is burning with doubts
Quench me with your fire of your love
My soul is restless within me
Until it rest with thee.

The life of the road is to long
Thorns and stones are there
Empower and enlighten me by your light
Accompany me by your grace.

The spiral journey within me
Burning with desires to reach you
Closed roads and check points blocked me
Unfold the ways to journey further.

**Sr.Amali Figurado**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட் சகோதரி லியோவின் நினைவலைகள்



பட்டணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சகோதரி லியோவே!
உம் அழைப்பின் நோக்கம் இவ்வுலகில் நிறைவெய்தி
அழைத்திட்டார் தம் அருகில் எம்பெருமான் புகழ்பாட
இறையரசு பரப்ப ஆன்மாக்களை தேடிச் சென்றீர்
கல்விப் பணியால் மாணாக்கரை அறிவில் மேம்படச் செய்தீர்
புத்திமதிகள் பல புகட்டி புண்பட்ட உள்ளம் ஆற்றி
உம்முடன் சேர்ந்துழைத்த ஆசிரிய சகோதரர்கள்
பெற்றனர் பல வாழ்க்கைப் பாடம்
உம் வாழ்வுதனில் வெளிப்பட்ட பண்புகளால்
எல்லோரையும் கவர்ந்திழுத்தீர்
உன் வார்த்தையில் வன் சொல் காணமாட்டோம்
இன்சொல்லால் பகிடிக்கதைகள் கூறி எல்லோரையும் சிரிக்க
வைப்பதோடும் கோலம் போட்டு நாடகம் நடிப்பீர்
வண்ண வண்ண உடுப்புக்கள் தைப்பீர்
சிறுவர் மகிழ்ந்திட சேர்ந்து மகிழ்வீர்
ஓய்விலும் பணிகள் பல செய்தீர்
உங்கள் இறுதி நாட்கள் மகிழ்ச்சியானது
நிறைவான வாழ்வு வாழ்ந்தாயம்மா
மண்ணக வாழ்வு முடிந்ததம்மா
விண்ணக வாழ்விற்காய் சென்று வாருங்கள்
இப்புவியில் உள்ளவரை உமை நாம் மறவோம்.

அருட்சகோ. அனஸ்ரேசியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jesus connects us with nature

Nature gives inner peace and joy

We love the nature, we depend on nature; nature is a big gift for us. We have to respect the mother earth. If we love and cherish nature, we are born again each day. It will speak a lot.

Nature gives new life, wisdom and light.
He Alone is great
Who turns the voice of the wind into a song made sweeter by his own loving.

I have found that spending time alone in nature surroundings connects me to the larger universe around me and restores my spirit in this hurried age. the simple act of sitting in a wood park and listening to the wind more through the leaves fills me with a sense of quiet and peace, the birds sound, bees sound, more close to God in a deeper way to meditate communing with nature is also an excellent way to unlock our creativety and generate new ideas.

Nature surroundings serve to stifle the endless chatter that fills our minds so that our true brilliance can be liberated.

While we spend time enjoying nature, observe our surrounding with deep concentration, study the complexity of the flower on the way the current moves in a sparking stream. Take our shoes off and feel the grass under our feet gives silent thanks that you have the privilege of enjoying these special gifts of nature.

As Mahatma Gandhi observed. "When I admire the wonder of a sunset or the beauty of the moon, my soul expands in worship of the creator."

Don't Hurry
Don't worry
You're only here
For a short visit
So be sure to stop and smell the flowers.
By Walter Hagen


**Sr. Revathy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா வழக்கும் சில வினாக்களும்

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் வழக்கு முடிவுக்கு வந்திருக்கிறது. தீர்ப்பில் குற்வாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது "நீதி தேவதை கண் திறந்தாள்" என்கின்றனர் சிலர். "வித்தியாவின் ஆன்மா சாந்தியடையும்" என்கின்றனர் வேறு சிலர். இன்னும் வழக்கு முழுமையாகவில்லை உயர்நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யப்படலாம் அங்குதான் இறுதியான தீர்ப்பு வழங்கப்படும் என்பது சட்டவியலாளர்களின் கருத்து.




இவையெல்லாத்துக்கும் புறம்பாக வித்தியா என்ற பாடசாலை மாணவி மீது மேற்கொள்ளப்பட்ட கொடூர வன்முறை எம்மை நோக்கி முன்வைக்கும் கேள்விகள் பல இருக்கின்றன. இதனை நாம் இலகுவாக ஒரு பெண்ணுக்கு நடந்த அநீதியாகவும் அதற்கு கிடைத்த தண்டனையை நீதியாகவும் கருதி கடந்து போக முடியுமா? வித்தியா மீது நடந்த வன்முறைக்கு பொறுப்பு வெறுமனே அந்த குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் மட்டும் தானா? இத்தகைய குற்றவாளிகளை உருவாக்கிய சமூகத்தை எந்த குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது?

இது ஒரு தனித்த சம்பவம் மட்டுமல்ல. பல்வேறு இடங்களிலே பெண்களுக்கு குறிப்பாக சிறுமியருக்கு எதிராக நடைபெறும் பாலியல் கொடூரங்கள், அதிகரித்த போதைப்பாவனை, வாட்கள், ஆயுதங்களுடன் மேற்கொள்ளப்படும் குழு மோதல்கள், வன்முறைகள் போன்ற பல்வேறு சமூக தீமைகளோடு இது இணைந்து நோக்கப்பட வேண்டும். அத்தகைய குற்றவாளிகள் யாரும் வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை அல்லது வானத்தில் இருந்து குதிக்கவில்லை. மாறாக எங்கள் குடும்பங்களில் பிறந்து, எங்கள் பாடசாலைகளில் கற்று, எங்கள் கழகங்களிலும், சனசமூக நிலையங்களிலும் விளையாடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தவர்கள் தான். படிப்படியாக குற்றவாளிகளை உருவாக்கும் ஒரு சமூகமாக நாம் மாறி வருகின்றோமா. என்று சிந்திப்பது அவசியமானது அல்லவா?

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே" என்பது மிகவும் அர்த்தமுள்ள பாடல் வரிகள் அந்தப் பிள்ளைகளின் உருவாக்கத்தில் முதலிடம் பெறுவது குடும்பங்கள். குடும்பங்களை சீரமைப்பது என்பது சமூகத்தை சீரமைப்பது என்றாகும். ஒரு பிள்ளை தனது வாழ்வில் வெளிப்படுத்த போகும் பிரதான விழுமியங்களும் நடத்தைக் கோலங்களும் குடும்பங்களிலிருந்தே அதற்கு கிடைக்கிறது. போரினால் தந்தையை இழந்த குடும்பங்கள், மனைவியரை ஏமாற்றிச்சென்று வேறு திருமணம் செய்யும் கணவர்கள் கைவிடப்பட்ட குடும்பங்கள், தாயாரின் ஒழுக்கப் பிறழ்வால் வீதிக்கு வந்த குடும்பங்கள், போதிய வருமான வழிகள் இன்மையால் தவறான வழிகளில் பணம் சம்பாதிக்க முனையும் குடும்பங்கள் என பல குடும்பங்கள் குற்றச் செயல்களின் விளைநிலங்களாக மாறி வருகின்றன.



குடும்பங்களை அடுத்து பாடசாலைகளை நோக்குகின்ற போது மானுட வாழ்வின் உயர் விழுமியங்களை விரும்பி அரவணைக்கும் மனப்பாங்குகள் பிள்ளைகளிடம் வளர்க்கப்படுவதில்லை. உயர் பெறுபேறுகளைப் பெறுவதையே ஒரே இலக்காகக் கொண்டு கல்வி நகர்த்தப்படுகிறது. மாணவர்களை ஒழுங்கு முறைக்குள் கொண்டுவர வன்முறை தடை செய்யப்பட்டதன் பின்பு மாற்று கட்டுப்பாட்டு வழிகள் தெளிவாக கற்றுக் கொடுக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் எமக்கு ஏன் வீண் வம்பு அன்று ஒதுக்கி விடுகின்றார்கள். இந் நிலையில் பிள்ளைகள் கட்டுப்பாட்டையும் இழந்து கல்வியையும் இழந்து விடுகிறார்கள்.

ஆகவே உண்மையான சமூக அக்கறை கொண்டவர்கள் முக்கியமாக இவ்விரு விடயங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எமது குடும்பங்களை எவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மைப்படுத்தலாம்? எமது பாடசாலைகளை எவ்வாறு உயர் விழுமிய விளைநிலங்களாக மாற்றலாம்? என்பதே இவர்களது தேடலாக இருக்க வேண்டும். குறிப்பாக கிறீஸ்தவ துறவற பணியாளர்கள் இவ்விடயத்தில் கரிசனை கொள்ளவேண்டும்.

தமது பொறுப்பிலுள்ள பணித்தளங்களில் எவ்வாறு குடும்ப வாழ்வைப் புதுப்பிக்க முடியும்? பாடசாலைகளில் விழுமிய உருவாக்கத்தை வளர்த்தெடுக்க முடியும? என்ற தேடலில் இவர்கள் ஆழமாக இறங்க வேண்டும்.



திருக்காட்சியாளர் விண்ணில் இருந்த புதிய ஜெருசலேம் மண்ணில் இறங்குவதாக கண்டகாட்சி உண்மையாக வேண்டுமானால் தீமைகள் மலிந்த எமது சமூகத்தை விழுமியங்களின் உறைவிடமாக மாற்ற வேண்டிய தேவையுள்ளது. இது வெறுமனே ஒரு சமூகப் பணியல்ல மாறாக உலகெங்கும் சென்று நாம் ஆற்றவேண்டிய ஓர் நற்செய்திப் பணியாகும்.

இவ்வாண்டில் நாம் மகிழ்ந்து கொண்டாடும் தூய யோசவாஸ் இப்பணிக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார். கிறிஸ்தவ குடும்பங்களை ஆழமான கத்தோலிக்க விசுவாசத்தில் திடப்படுத்தியதன் மூலம் எமது குடும்பங்களை இறையரசின் விளை நிலங்களாக மாற்றிய அவரின் அடிச்சுவட்டில் நடந்து நாமும் குடும்பங்களை நோக்கி எமது கவனத்தை குவிக்க வேண்டும். உயர்ந்த இலட்சியங்களைக்கொண்ட நல்ல மனிதர்களை உருவாக்கும் இடங்களாக எமது குடும்பங்களை மாற்ற வேண்டும்.

தூய யோசவாசின் வழிநின்று இந்த உன்னத பணியைச் செய்ய இறைவன் எம்மை அழைத்து நிற்கின்றார். நிறைவேற்றி வைப்போமா?

அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வின் நன்நாள்



ஆனி 29 இல் எமது நல்ல பிதாவின் பெயர் கொண்ட திருநாளில் மகிழ்ந்த நன்நாள்

காலை 9 மணி எம் மனங்களில் ஒரு புத்துணர்வு எமது நிறுவுனரின் பெயர் கொண்ட திருநாளை நினைவு கூர்ந்து அவரை எம் மனக்கண் முன் நிறுத்தி மகிழும், நன்றி கூறும் நாளல்லவா இந்நாள். ஆம் எம் மடத்தின் முன் நிறுவப்பட்டிருக்கும் திருக்குடும்ப சுரூபத்திற்கு முன் ஆசாரத்திற்குரிய பீற்றர் பியன் வெனுவின் உருவப்படம் அழகாக அலங்கரிக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தது. எமது பங்கைச் சேர்ந்த பொதுநிலை உறுப்பினர்கள் 10 பேர் ஒன்று கூடினர். எமது குழுவின் 5 சகோதரிகளும் ஒன்றாக சேர்ந்திருந்தோம். இளங்காலை மெல்லியதென்றல் இதமாக எம் ஒவ்வொருவரையும் வருடிச் செல்ல பிரபஞ்சத்துடன் இணைந்து இறைவனை வழிபட ஆரம்பித்தோம் 30 நிமிட வழிபாடு பாடல் சிந்தனை, செபம், என, 200 வருடங்களாக இறைவன் எமது சபையை சபையின் அங்கத்தவர்களை வழிநடத்தி வருகின்ற அற்புத செயல்களுக்காக, ஆசீர்வாதங்களுக்காக ஒருமனதாய் குரலெழுப்பி நன்றித் துதி பாடினோம். இவை யாவும் எமது நல்ல பிதாவின் கனவு நனவாகின்றதை நாம் எமது உள்ளத்தால் உணர்ந்தோம்.

இங்கே உறவுப் பகிர்வு இடம் பெற்றது அந்தப் பகிர்தலிலே தங்களுடைய வாழ்வின் அனுபவங்கனை பகிர்ந்து கொண்டோம். அத்தோடு தமது பணி தூர நோக்கு உள்ளதாக இருக்க வேண்டும் என்றும் அதற்காக தாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்போம் என்றும் கூறிக்கொண்டோம். குறிப்பாக இளைய சமுதாயம் கடவுள் பயம் அல்லாதவர்களாக, ஆடம்பர வாழ்விலும் களியாட்டங் களிலும் ஈடுபடுகின்றார்கள். பெற்றோர்களாகிய நாம் அவர்களை நல்வழிப்படுத்துவோம். அத்தோடு ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை தங்கள் அர்ப்பணத்தில் பிரமாணிக்கமாக வாழ்வதற்கு தங்களை உருவாக்கிய அருட்சகோதரிகளை நினைவு கூர்ந்தார்கள். இறைவனடி சேர்ந்தவர்களையும் நினைத்து பெருமையுடன் நன்றி கூறினோம்.

பருத்தித்துறை குழுமம்
திருக்குடும்ப கன்னியர்மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நிறுவினரின் பெயர் கொண்ட திருவிழா



திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் பொதுநிலையினரின் முக்கிய பங்கினை உணர்ந்து பயனளிக்க வேண்டுமென நிறுவுனரால் விதைக்கப்பட்ட விதையை தொடர்ந்து பேணி வளர்த்த அனைவருக்கும் நன்றியை நவில்கின்றோம். இன்றுவரை இறைவன் தன் அருட் கொடையினால் நிரப்பி நிறையாசீருடன் வழி நடத்தியமையை நினைவு கூர வேண்டியது மிக முக்கிய செயலாகும்.


திருக்குடும்பத்தின் நோக்கையும் ஆன்மீகத்தையும் உரிய முறையில் வாழவேண்டிய திருப்பயணத்தில் ஆனி 29ஆம் திகதி ஸ்தாபகரின் பிறந்த தினத்தை தலவாக்கலை திருக்குடும்ப அருட்சகோதரிகளும் திருக்குடும்ப பொதுநிலையினரும் இணைந்து கொண்டாட ஒன்று கூடினோம். புதிய யுகத்திலே அருள் வாழ்வு நோக்கிய பயணத்தில் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் முற்றத்திலிருந்து அருட்சகோதரிகளும் பொதுநிலையினரும் பவனியாக சென்று மடத்தின் சிற்றாலயத்தில் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தில் ஒன்றிணைந்தோம்.

தொடர்ந்து அன்பே உருவான பரம்பொருளிடம் நல்லதோர் இதயம் வேண்டி அனைவரும் நற்கருணை தியானவழிபாட்டில் இணைந்தோம்.

நற்கருணை ஆண்டவரின் திருமுக தரிசனத்துடன் இணைந்திருந்த காட்சியானது அகத்தினில் அருள் மழை பொழிகின்ற அனுபவமாக இருந்தது. ஆகா! என்ன அற்புதம் உயர்ந்த ஒருமலை உச்சியில் இருந்து பாயும் நீர் வீழ்ச்சியானது அழகிய ஐந்து கிளைகளை அருவிகள் வழி பாய்ந்து பரந்து செல்லும் காட்சி எத்துணை அழகிய உணர்வை தட்டி எழுப்பியது மலைக் குன்றுகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் விசுவாசம், செபவாழ்வு, ஆழ்ந்தபக்தி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான தீர்மானம், உண்மை அன்பு மகிழ்ச்சி, சமாதானம், ஏழ்மை, தவம் கற்பு, குழு வாழ்வு போன்ற விருது மொழிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்த விதம் உயிர்த்துடிப்பாக இருந்தது.




அத்தோடு ஒற்றுமையின் சின்னமாகவும் புளிக்காரமாக விளங்குகின்ற எம் சபை பகிர்தல் அந்நியோன்னிய ஆதரவு என்பவற்றின் மையமாகவும் உயிராற்றலின் விளங்குகின்றது. மேலும் இன்னிசையுடன் கூடிய ஒலி இயேசு வல்லமை எனக்கு தாரும். வல்லமை தாராயோ தூய வல்லமை தாராயோ என்ற வரி இன்றும் மனதில் ஆழமாக பதிந்துள்ளது. "நல்லதோர் போராட்டத்தில் ஈடுபட்டு ஓட்டத்தை முடித்துவிட்டேன் ஸ்தாபகரின் வாழ்வில் நடந்தசம்பவம் உன்னத வாழ்வின் அழைப்பின் மேன்மையை உணர்த்தியது." நற்செயல்களை முன்மாதிரிகையாக்கி தொடர்ந்து பயணிப்போம்.

திருமதி மு.தவநேவிஸ்மேரி
பொதுநிலை அங்கத்தவர்
தலவாக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Count Your Blessings

I listen to my heart it is faster than any day when I count the blessing of God. I count the blessings of God I am filled with gratitude. Listening to God took the best part of my life. The exemplary life of my parents and listen to my inner voice within me, and following the Holy Family sisters closely. I too wanted to give myself totally to him.

There are moments to doubts, disappointed, discouragement, in my journey but always the word of God strengthen me 'My grace is sufficient for you". It is the love and the unfolding presence which gave me energy to go forward in my life. He designed me through events, situations and people until I get His design. I became mature to know whom am I. The new way of Inter - Connecting cosmos is an new awareness helping me to be compassionate, loving and to experience the presence of God in everthing.

"The ripples of the kind hearts are the highest blessings of the universe". I remember all the people, specially, my formatters, spiritual directors, superiors and all the Sisters who have helped me to come up in the life I have chosen. I treasure the blessings and the beautiful memories of the vist to the Holy land in Martillac. I experienced the same breath of our dear founder, and to walk in the path where he walked. It is grace filled moment to be in the contemplative chapel and being one with the sour rings and with the cosmic family are my enriching experiences. I will never forget the blessings I received and try to keep it my heart for my future reflections.

The following word of our Holy father sticks me very much "Remember God's active role in your life, including the blessing he has bestowed on you. "It is God's love and mercy that I am able to say whole hearted Yes to Him. I am grateful for all those who are prepared me up to now to make my final commitment. I carry all the rich experiences and the blessings to continue his mission in the world. I remain with gratitude to each one of you. As a family we are called to thank God for all the blessing we received so I too joint with all to thank God to praise his name forever for his wonderful deeds are marvelous.

**Sr. Amali Figurado**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

❖ இளம் சிறகுகள் நாம்

உழைப்பை உன்னதமாக்கிய எம் மானிடப்பிறப்பு
இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.
நட்புக்களிடையே ஒற்றுமையை வளர்த்து
அழகான சமுதாயத்தை உருவாகக்கி
கல்வியை நன்கு பயின்று
அனைவரது கருத்தையும் செவிமடுத்து
நற்கருத்துக்களை பிறருடன் பகிர்ந்து
உதவிக் கரம்கொடுத்து
புதிய உறவுகளை வளர்த்து
எல்லோரும் சந்தோசமாக இணைந்து
சமுதாயத்தில் நற்பிரஜையாகி
நல்லதொரு நாட்டை உருவாக்குவோம்.

❖ வலிகள் பலதாங்கி வாழும் எம் இதயம்...........

பட்ட துன்பங்கள் பல தாங்கினாலும்;
அன்று நிகழ்ந்த அந்த சம்பவங்கள்...........
இனம் புரியாத உணர்வுகளாக
அழியாத நினைவுகளாக உள்ளன.
வண்ணப் பூச்சிகளாய் நாம் சிறகடித்து வாழ்ந்த
பள்ளிப் பருவத்தினை நாம் சந்தோசமாய் கழித்திட
இன்னமும் துடிக்கிறது எம் இதயம்........

❖ நெஞ்சில் அழியா நினைவுகள்

ஆறுகளாலும் கடல்களாலும் சூழ்ந்த எம் பூமி
போர் என்ற இரண்டெழுத்தில் புகுந்து
உயிர் என்ற மூன்றெழுத்தில் உறவுகளைப் பிரிந்து
துக்கம் என்னும் நாலெழுத்தை தொலைத்து
துப்பாக்கி என்னும் ஐந்தெழுத்தில் அகப்பட்டு
உறவுகளை இழந்து தனிமரமாய் நிற்கிறோம்
இனி நமக்கு போரும் வேண்டாம் சாவும் வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மாற்றம்

எங்கோ பிறந்தோம் எங்கோ வளர்ந்தோம்
அனைவரும் இங்கே சந்தித்து கொண்டோம்
இதயத்தை நட்பால் சிந்தித்துக் கொண்டோம்

முகங்களைப் பற்றி யோசித்ததுமில்லை
இனம் பணம் பார்த்து நேசித்ததுமில்லை
எதிர் பார்ப்புகள் எதுவுமில்லை
ஏமாற்றங்கள் சிறிதுமில்லை - அவரவர்
கருத்துக்களை இடம் மாற்றிக் கொண்டு
பாராட்டுக்களை பரிமாறிக் கொண்டோம்

சின்ன சின்ன சண்டைகள் இட்டு
சீக்கிரத்திலேயே சமாதானத்திற்கு வந்தோம்
இலட்சியங்களை சொல்லி மகிழ்ந்தோம்
நன்மைகள் வளர முயசிப்போம்
நட்பால் உயர்ந்து சாதிப்போம்.

மல்லாவி இளையோர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தியான நாட்கள் - புது மனிதர்களாக மாற

தெய்வீக தன்மையுடன் - மிகவும்
துடிப்புடன் ஆரம்பமான சிந்தனை – என்
இதயக் கண்களினால் அனைத்தையும் பார்க்க,
இரசிக்க, இறைவனின் புனிதமான உயிருள்ள பிரசன்னத்தை
ஒவ்வொரு துணிக்கைகளிலும் காண - என்னை
உந்தித்தள்ளியது; என் இதயத்துக் கண்கள்.

புனிதத்தன்மை வாய்ந்த - இப்
பரந்து விரிந்த பிரபஞ்சத்திலே – உயிர்
வாழுகின்ற அனைத்தும் -எமக்கு
இறைவல்லமையை வெளிப்படுத்துகின்றன- இவ்
வல்லமை தான் ஒரு சக்தியாக – எம்
அனைவருள்ளும் ஊற்றெடுக்கின்றது - எம்
எல்லோரையும் இயேசுவின் திரு இருதய அன்பில்
ஒன்றிணைக்கிறது! ஐக்கியப்படுத்துகிறது.

இயேசு நன்மைகளையே செய்தார்- பல
துன்பங்களுக்கு முகம் கொடுத்தார் - இறுதியில்
தன் உயிரையும் ஈந்தார் எம்மவர்க்கு
நிலைவாழ்வை பெற்றுத்தந்தார் -ஏனென்றால்
எம் ஒவ்வொருவர் மேலும் -மிகுந்த
அன்பு கொண்டிருந்தார்- ஆகவே
இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நான்- இன்று
என்னை உடைக்க கையளிக்க
ஆயத்தமாய் இருக்கின்றேனா? - இக்
கையளிப்பில் தான்- எனது
உண்மையான ஒன்றிப்பின் தன்மை விளங்குகின்றது- இன்னும்
ஐக்கியத்தின் வல்லமை வெளிப்படுகின்றது.
எனது சுயம் என்பது –நான்
இறைவனின் பிள்ளை என்பதாகும்- எனவே
ஏனைய சகோதரங்களிலும்
எனது குழுவிலும் எனது பங்கிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பணித்தளங்களிலும் - அத்துடன்
அனைத்து பிரபஞ்சத்திலும் - இறை
ஒளியைக் கண்டு அனுபவித்து – அனைத்துடனும்
ஒற்றுமையை வளர்க்க – ஏன்
வேற்றுமையில் ஒற்றுமையை காண – பரிசுத்த
அன்பால் அனைவரையும் ஈர்க்க – நல்
உறவை கட்டியெழுப்ப - இன்றே
விரைந்திடுவோம்.

எமது சுயத்தை கண்டறிவோம் - ஆழமான
இருத்தலில் இறைவனை சந்திப்போம் - எம்
உள்ளார்ந்த குரலுக்கு செவிமடுப்போம் - அந்த
விசுவாசச் செய்தியை எம் வாழ்வாக்குவோம்.
வாருங்கள் இன்றே தொடங்குவோம் எம்
ஆன்மீகப் பயணமான ஆழ்தியானத்தை – தினமும்
பயிற்சிப்படுத்துவோம் - இறை வல்லமையை
எம் உள்ளங்களிலே அனுபவிப்போம் - அதை
எம் வாழ்வில் அன்றாட செயற்பாடுகளில் காட்டுவோம் - வாருங்கள்
விரைந்து புறப்படுவோம் - இறைவனின்
மேலான அன்பை சுவைக்க, ஆழமாக்க...
புது மனிதர்களாக மாற
புதிதாய் பார்க்க புதிதாய் சிந்திக்க – எம்
இதயக் கண்களை திறப்போம் -அனைத்தையும்
உற்று நோக்குவோம் சிந்திப்போம் - இறுதியில்
ஒன்றிணைவோம் அனைத்து பிரபஞ்சத்தோடும்
ஐக்கியமாய் வாழ்ந்திடுவோம்.

தியானத்தில் ஈடுபட்ட சகோதரிகள்

8331(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான உறவுகளே!!

எமது தகவற் சேவைக்கென நீங்கள் அனுப்பிய ஆக்கங்கள், ஒத்துழைப்புகளுக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எம் சபையின் ஐந்து கிளைகளின் அனுபவ ஆக்கங்களை ஒன்றாகத் தாங்கி வெளியாகின்ற 'குடும்ப உறவின் சங்கமம்' பற்றிய உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்கள் ஆலோசனைகள், ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

அடுத்த சங்கம இதழுக்கான (கிறிஸ்து பிறப்பு) உங்கள் படைப்புக்களை **30.11.2017** இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் படைப்புக்கள் பின்வரும் கருப்பொருளின் மையமாக அமையட்டும்.

**மனிதத்தில் புனிதம் மலரட்டும்**

- வாழ்வின் விடிவெள்ளி
- கன்னியின் உதரமும் கன்னி மரியாளின் பாடலும்
- நான் தேடும் - மனித அவதாரம்

**உங்கள் தொடர்புகளை விரைவாக்கி, எமது சேவையை இலகுவாக்குங்கள்:**

மின்னஞ்சல் முகவரி:


**sangamuminfo@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print @ : Mega 021 221 7939